# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 24 புதன்கிழமை (09-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:224


# பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டாலேயே யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு விழா!

## செயலகக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை9

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு விழாவை நடத்த முடியும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக இங்கு வந்திருந்த விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் குழுவினிடம் இந்தக் கருத்து திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த கூட்டம் ஒன்று நேற்று யாழ்.செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் தலைமையில் நடைபெற்றது. விளையாட்டுத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகளான எல்.பீரிஸ், எஸ். பத்மா ஆகியோர் தலைமையிலான குழுவினர், யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

கூட்டத்தில் தேசிய விளையாட்டு விழாவுக்கான இறுதி ஏற்பாடுகள் பற்றிப் பேசப்பட்டது. அப்போது கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின பிரதிநிதிகள், "சமாதானத்துக்கான உறுதியான சூழல் ஒன்று மீண்டும் ஏற்பட்டாலேயே தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியும். அதற்கு பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு சமாதான முயற்சிகள் மீண்டும் முன்நகர வேண்டும். அப்போதே தேசிய விளையாட்டு விழா போன்ற விழாக்கள் பற்றிச் சிந்திக்க

(2ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக வெஸ்பேர்க் - தமிழ்ச்செல்வன் பேச்சு

## ஆக்கபூர்வமாக அமைந்ததாக இருதரப்பினரும் தெரிவிப்பு





கிளிநொச்சி,ஜூலை9

தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் உள்ள தடைகள், முட்டுக்கட்டைகள், அவற்றிற்குத் தீர்வு காணும் வழிமுறைகள் ஆகியன குறித்து நோர்வே சமாதானக் குழுவின் விசேட ஆலோசகர் ஜோன் வெஸ்பேர்க் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் ஆராய்ந்தார். இச் சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து வாகன அணி மூலம் ஏ-9 வீதி வழியாக நேற்றுக் காலை ஜோன் வெஸ்பேர்க், பொது மக்கள் தொடர்பு அதிகாரி தோமஸ் ஹெக்லண்ட் ஆகியோர் கிளிநொச்சி வந்தடைந்தனர்.

இவர்கள் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை முற்பகல் 10 மணிக்குச் சந்தித்தனர். சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் பேச்சுக்களில் பங்கேற்றார்.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பு தொடர்பான வரைபு தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிரானின் முடக்கநிலை பற்றி கேட்டறிந்தார் வெஸ்பேர்க்

கிளிநொச்சி,ஜூலை9

வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உபகுழுவின் (சிரான்) செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளமை தொடர்பாக நோர்வே சமாதானத் தூதுக் குழுவின் விசேட ஆலோசகர் ஜோன் வெஸ்பேர்க் ஆராய்ந்தார்.

கிளிநொச்சிக்கு நேற்று வருகை தந்த அவர் 'சிரான்' அலுவலகத்துக்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடி, செயற்பாடுகளின் முடக்கம் குறித்து விசாரித்தறிந்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்துக்கும் வெஸ்பேர்க் சென்று

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடனில் பேச்சு?

கொழும்பு,ஜூலை9

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகளும் அரசும் சுவீடனில் சந்தித்து பேச்சு நடத்த அந்நாட்டு அரசு இணங்கியுள்ளதாக இணையத்தள செய்திச் சேவையொன்று தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயத்தை பேசித் தீர்க்க அரசும் புலிகளும் முன் வந்தால் அப்பேச்சு சுவீடனில் இடம் பெறும் என்று நம்பப்படுகிறது.

## குரங்குபாஞ்சான் முகாம் குறித்த சர்ச்சையைத் தீர்க்க இன்று பேச்சு

திருகோணமலை,ஜூலை9

திருகோணமலையில் குரங்குபாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகள் பயிற்சி முகாம் அமைந்துள்ளமை தொடர்பாக உருவாகியுள்ள சர்ச்சைக்குத் தீர்வு காணும் வகையில் 'படை அதிகாரிகள் - விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் - கண்காணிப்புக் குழுவினர் ஆகியோர் பங்குபற்றும் முக்கிய சந்திப்பு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

கட்டைப்பறிச்சானிலுள்ள சூனியப் பிரதேசத்தில் இச்சந்திப்பு கண்காணிப்புக் குழுத் தலைவர் ட்ரிக்வே ரேலிவிகன் முன்னிலையில் இடம்பெறும்.

கடந்த ஞாயிறு மற்றும் திங்கட் கிழமைகளில் திருகோணமலையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

# படை முகாம் வேலியை நெருங்கிய சிறுவனை மின்சாரம் தாக்கியது!

## வேலணையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

படைமுகாம் எல்லையில் இடப்பட்டிருந்த முட்கம்பி வேலியை தீண்டிய சிறுவன் மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகியதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவம் நேற்று வேலணையில் இடம் பெற்றது.

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தில் தரம் 5 இல் பயிலும் அன்ரனி அஜந்தன் (வயது 10) என்ற சிறுவனே மின்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளான். இச்சிறுவன் கல்வி பயில்கின்ற பாடசாலையின் மைதா

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரம் உற்சவத்துக்கு சென்றவேளை

# உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைந்த வவுனியா மாணவன் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம்,ஜூலை9

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் உற்சவத்தில் கலந்துகொள்ளச் சென்ற வவுனியாவைச் சேர்ந்த மாணவன் ஒருவரை உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் பிரவேசித்ததாகக் கூறி படையினர் கைது செய்துள்ளனர்.

வவுனியாவில் உள்ள பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்பவர் என்று கூறப்படும் மேற்படி மாணவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# புலி உறுப்பினர் இருவர் மட்டக்களப்பில் கைது!

## கைக்குண்டு வைத்திருந்தனராம்

மட்டக்களப்பு,ஜூலை9

மட்டக்களப்பில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரை, காயங்கேணியில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் இரு உறுப்பினர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த குலதீபராஜ் மற்றும் பிரசாந், ஆகியோர், இலக்கம் இல்லாத மோட்டார் சைக்கிளில் தமது சோதனைச் சாவடியைக் கடக்க முயன்றதாகவும் - அவர்களை வழிமறித்துச சோதனை நடத்தியதில் அவர்களிடம் இருந்து கைக்குண்டு மீட்கப்பட்டதாகவும் - படையினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் பொலிஸாரிடம் படையினர் ஒப்படைத


(14ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா மற்றும் மன்னாரில் அடுத்த மாதம் பொங்குதமிழ்

யாழ்ப்பாணம்,ஜூலை9

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் அடுத்தமாதம் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற கோஷத்தைமுதன்மைப்படுத்தி கடந்த மாதம், யாழ்.பல்கலைக்கழகத்தில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே இந்த பொங்குதமிழ் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

சகல சேமிப்புக் கணக்குகளுக்கும்

ரூபா. 300,000/- வரை

இலவச ஆயுட் காப்புறுதி

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

# நாடாளுமன்றத்தில் ஆறு எம்.பிக்களின் பெட்டகங்களில் வெடிகுண்டுச் சோதனை!

## அதற்காகச் சபை 15 நிமிடங்கள் ஒத்திவைப்பு

கொழும்பு,ஜுலை9

நாடாளுமன்றத்தில் ஆறு எம்.பிக்களின் பெட்டகங்களில் குண்டுகள் மற்றும் கொலை ஆயுதங்கள் இருக்கின்றனவா என்று சோதயைிட வேண்டும் என்று சபாநாகரிடம் அரசுத் தரப்பு எம்.பிக்கள் நேற்று வற்புறுத்தினர். அதனையடுத்து சபையில் ரகளை, அமைதியின்மை ஏற்பட்டது. அதனால் சபை நடவடிக்கைகளைச் சபாநாயகர் 15 நிமிட நேரம் ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்குச் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் கூடியது.

சபாநாயகர் ஜனாதிபதியின் அறிவித்தல் ஒன்றை வாசித்த பின்னர் நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக் குறித்தும் அறிக்கையொன்றை விடுத்தார்.

சபாநாயகர் அறிக்கை விடுத்து முடிந்ததும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் எழுந்து ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார்.

பெட்டகங்களின் திறப்புக்களை எடுத்துச் சென்ற ஆறு எம்.பிக்களது பெட்டகங்களையும் சபையை ஒரு மணிநேரம் ஒத்திவைத்து விட்டு சோதனையிட வேண்டும். நாடாளுமன்ற எம்.பிக்கள், நாடாளுமன்ற ஊழியர்கள், செய்தியாளர்களது பாதுகாப்பு முக்கியமானது. ஆறு எம்.பிக்களது பெட்டகங்களில் குண்டுகள், ஆயுதங்கள் இருக்கலாம். எனவே, சபையை ஒரு மணி நேரம் ஒத்திவைக்க வேண்டும் என்று அமைச்சர் அஸ்வர் கேட்டுக் கொண்டார்.

ஆளுங்கட்சிக் கொறடாவும், அமைச்சருமான மஹிந்த சமரசிங்க இதனை ஆதரித்துப் பேசினார்.

இந்த நாடாளுமன்றத்திலிருக்கும அனைவரது பாதுகாப்பும் மிக முக்கியமானது. சபையை ஒருமணி நேரம் ஒத்திவைத்து விட்டு ஆறு எம்.பிக்களது பெட்டகங்களை சோதனையிட வேண்டு என்று அவர் கூறினார்.

பொ.ஐ.மு. எம்.பி.டி.எம் ஜயரத்ன இதனை ஆட்சேபித்துப் பேசுகையில்:-

"சபாநாயகரது பொறுப்புக்கள் எவை என்பது உங்களுக்குத் தெரியும். அமைச்சர்களது அறிவுரை உங்களுக்குத் தேவையா? இன்று நாட்டு மக்களுக்கு பாதுகாப்பில்லை. எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் படடப்பகலில படுகொலை செய்யப்படுகின்றார்கள்" என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பேசுகையில்:-

சபையில் நடைபெறவுள்ள விவாதத்துக்கு குந்தகம் ஏற்படாமல் சபையை பதினைந்து நிமிடங்கள் ஒத்திவைத்து விட்டு சோதனை நடத்துங்கள் என்றார்.

இதனையடுத்து சபாநாயகர் சபையை பதினைந்து நிமிடங்கள் ஒத்திவைத்தார்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் உத்தரவின் பேரில் நேற்று முனதினம் முழு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியும் தீவிர பாதுகாப்புச் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. இச்சோதனைக்கான கோரிக்கையை சபைத் தலைவரான அமைச்சர் டபிள்யு ஜே.எம்.லொக்கு பண்டார விடுத்திருந்தார்.

மோப்ப நாய்கள் சகிதம் பொலீஸார் தேடுதலில் ஈடுபட்டனர். பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் அலுவலகங்கள் உட்பட நாடாளுமன்ற கட்டடத் தொகுதியிலுள்ள சகல குழுக்கள் அறைகளும் எம்.பிக்களது பிரத்தியேகப் பெட்டகங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஆயினும், இச்சோதனையில் ஆறு எம்.பிக்களின் பெட்டகங்கள் மாற்றுச் சாவிகள் இல்லாததால் சோதனையிடப்படவில்லை என்பதாலேயே நேற்று இந்தப் பிரச்சினை மீண்டும் எழுந்தது. (ஒ-3)

## சபைக்குள் சவப்பெட்டியை எடுத்துவந்த ஆறு எம்.பிக்கள் மீது நடவடிக்கை

### சபாநாயகர் அறிக்கை விடுத்து அறிவிப்பு

கொழும்பு,ஜுலை9

நாடாளுமன்றப் பாதுகாப்பை மீறி சபைக்குள் சவப்பெட்டியை எடுத்து வந்த எதிர்க்கட்சி எம்.பிக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுக்காலை சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்றப் பாதுகாப்பு குறித்து சபையில் அறிக்கை ஒன்றை விடுத்த போதே சபாநாயகர் இதனை அறிவித்தார்.

அறிக்கையில் சபாநாயகர் மேலும் தெரிவித்ததாவது:-

2003 ஜுன் 19 ஆம் திகதி எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலர் சவப்பெட்டியொன்றை சபைக்குள் கொண்டு வந்தனர். அன்றையதினம் காலை சபை கூடுவதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தரப்பு நுழைவாயிலுக்கருகேயுள்ள வராந்தாவில் சில எம்.பிக்கள் சவப்பெட்டியொன்றை பொருத்திக்கொண்டிருப்பதாக எனக்கு தகவல் வந்தது. உடனடியாக நான் வராந்தாவுக்குச் சென்று சவப்பெட்டியை அப்புறப்படுத்துமாறு நாடாளுமன்றப் பொலீஸாருக்கு உத்தரவிட்டேன். இருந்தும் பொலீஸார் எனது உத்தரவை நடைமுறைப்படுத்தவில்லை. இது தொடர்பாக இப்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலர் சவப்பெட்டியை சபைக்குள் எடுத்துச் சென்றனர். உடனே சபையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தேன்.

ஒரு மணி நேரத்தின் பின்னர் படைக்களச் சேவிதருக்கு பொலீஸா உதவியுடன் சபைக்குள்ளிருந்து சவப்பெட்டியை அப்புறப்படுத்தும்படி பணிப்புரை விடுத்தேன். இதன்படி பொலீஸா சபைக்குள் நுழைய முற்பட்ட போது எதிர்தரப்பு எம்.பிக்கள் சிலர் பொலீஸாருக்கு கடமையைச் செய்யவிடாமல் தடுத்துள்ளனர். எனது பணிப்புரை நடைமுறைப்படுத்தப்படாதது குறித்தும் இப்போது விசாரணைகள் நடைபெறுகின்றன.

நாடாளுமன்றத்தின் கௌரவத்தையும் பாதுகாப்பையும் பாதுகாக்க வேண்டியது சபாநாயகர் என்ற வகையில் எனது பொறுப்பாகும்.

முன்னர் மலர் வளையம் எடுத்து வரப்பட்டது போல் குண்டுகள், பயங்கர ஆயுதங்களைச் சபைக்குள் கொண்டு வரமுடியும். சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாடாளுமன்றத்தில் குண்டு வெடித்தது; சிலர் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் நாடாளுமன்றம் நேற்று பொலீஸாரால் சோதனையிடப்பட்டது. ஆனால், ஆறு எம்.பிக்கள் தங்களது பிரத்தியேக பெட்டகங்களின் திறப்புக்களுடன் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டிருந்த மாற்றுத் திறப்புக்களையும் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர். அதனால் அந்த ஆறு எம்.பிக்களது பெட்டகங்கள் சோதனையிடப்படவில்லை. மாற்றுத் திறப்புக்களை வழங்கிய நாடாளுமன்ற அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு சபாநாயகர் அறிக்கையில் தெரிவித்தார். (ஒ-3)

### சுபத்திரன் கொலை வழக்கு:

## காலாளிகள் இருவரும் பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஜுலை9

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் த.சுபத்திரனின் படுகொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வேம்படி மகளிர் கல்லூரி காவலாளிகள் இருவரையும் பிணையில் செல்ல யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்று அனுமதியளித்தார்.

காவலாளிகள் இருவரையும் பிணையில் விடுமாறு கோரி மேல்நீதிமன்றத்தில் சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று நடந்தது. அப்போது காவலாளிகள் இருவரையும் பிணையில் செல்ல அனுமதிக்குபடி மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா யாழ்.நீதிவானுக்கு உத்தரவுபிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து மாணிக்கம் இளங்குமரன், முத்துக்குமாரு சந்திரகுமாரன் ஆகிய அந்த இரு காவலாளிகளும் யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் நேற்று மாலை ஆஜர் செய்யப்பட்டனர்.

மேல் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, இருவரையும் தலா 2 லட்சம் ரூபா ஆள்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

ஒவ்வொருமாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.பொலீஸ் நிலையத்தில் கையெழுத்து இடவேண்டும் என்றும் இருவருக்கும் உத்தரவிடபபட்டது. (ஒ-3-8)

### தமிழகக் குழுவின் நாதஸ்வரக் கச்சேரி

யாழ்ப்பாணம்,ஜுலை9

காரைநகர் பண்டத்தரிப்பான் புலம் சிதம்பரேஸ்வரப் பெருமாள் ஆலயத்தில் இன்று காலை இடம்பெறும் கும்பாபிஷேக நிகழ்வில் தமிழ்நாடு அரசசபைக் கலைஞர்களின் நாதஸ்வர தவில் கச்சேரி இடம்பெறவுள்ளது.

கலைமாமணிகள் திருப்பாம்பரம் சகோதரர்கள் ரி.கே.எஸ்.சுவாமிநாதன், ரி.கே.எஸ்.மீனாட்சி சுந்தரம் மற்றும் தவில் செம்மல் ரி.ஆர்.சுப்பிரமணியம், இசைமாமுரசு கே.ஜி.கல்யாண சுந்தரம் ஆகியோர் இக்கச்சேரியை வழங்குகின்றனர்.

இவர்களுடன் உள்ளூர் கலைஞர்களின் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (ஒ-9)

### பிந்துனுவெவ படுகொலைகள் வழக்கு

## மரணதண்டனை தீர்ப்பை எதிர்த்து இரு பொலீஸாரும் மேன்முறையீடு

கொழும்பு,ஜுலை9

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம படுகொலைகள் வழக்கில் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட இரு பொலீஸாரும் அத்தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேனமுறையீடு செய்திருக்கின்றனர்.

பிந்துனுவெவ பொலீஸின் குற்றத தடுப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் சேனக ஜயம்பதி கருணசேன, உதவி இன்ஸபெக்ரான ரோஜர் ரத்னாயக்க ஆகிய இருவருமே இந்த மேன்முறையீடுகளைச் செய்திருக்கின்றனர்.

வழக்கில் இவர்கள் இருவரும் 32 ஆவது 41 ஆவது எதிரிகளாவர்.

தங்களைக் குற்றவாளிகளாக்கச் சாட்சியம் இருக்கவில்லை எனவும் மேல் நீதிமன்றத் தீர்ப்பு சாட்சியங்களுக்கு முரணானது எனவும் இரு பொலீஸாரும் தமது மேன்முறையீட்டு மனுக்களில் தெரிவித்திருக்கின்றனர்.

இவ்வழக்கில் மேலும் மூவர் மீது மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

### வெடிபொருள் அகற்றும் பணியில்

## மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு முன்னணியில்!

வவுனியா,ஜுலை9

இராணுவ நடவடிக்கைகளின் போது வடக்கு - கிழக்கு பகுதிகளில புதைக்கப்பட்ட வெடிபொருள்களினை வெவ்வேறு அமைப்புக்கள் அகற்றி வருகின்றன.

விடுதலைப் புலிகளின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவே பல்லாயிரக்கணக்கான வெடிபொருள்களை அகற்றி மக்களின் இயல்பு வாழ்வுக்கு சுமுக நிலையினை ஏற்படுத்தியிருக்கிறது.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு இதுவரை 1 லட்சத்து 82 ஆயிரத்து 944 வெடிபொருள்களினை அகற்றி அழித்துள்ளது.

141 கோடி 98 லட்சத்து 61 ஆயிரத்து 357 சதுர மீற்றரில் கண்ணிவெடி இருப்பது கண்டறியப்பட்டது. 87 லட்சத்து 13 ஆயிரத்து 417 சதுர மீற்றர் பகுதியில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டன.

219 இடங்களில் 412 லட்சத்து 25 ஆயிரத்து 228 சதுர மீற்றர் பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன.

இதுபற்றி அறிவித்துள்ள மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 5 ஆயிரத்து 355 வெடிபொருள்களை அகற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## ஐ.தே.க. அங்கத்துவத் திரட்டலை பொலநறுவையில் நடத்த தீர்மானம்

கொழும்பு,ஜுலை9

ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்தை மேலும் விரிவுபடுத்துவதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

இதன்படி எதிர்வரும் 18 ஆம், 19 ஆம், 20 ஆம் திகதிகளில் பொலநறுவையில் அங்கத்தவர்கள் திரட்டல் நடைபெறும். இதற்கு முன்னர் அங்கத்தவர்கள் திரட்டல் மாத்தறையில் நடைபெற்றது.

இதற்கிடையே கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ரோய் போகாவத்த, வத்தளை பிரதேச சபைத் தலைவர் தியாகரத்ன அல்விஸ், ஹிக்கடுவ நகர சபையின் முன்னாள் உபதலைவர் நிமல் சந்திரசிறி, பெந்தலை பிரதேச சபையின் உபதலைவர் ஜீ.எச்.பி. ரவீந்திர ஆகியோரின் கட்சி அங்கத்துவத்தை தற்காலிகமாக தடை செய்வதை ஐ.தே.க செயற்குழு உறுதிப்படுத்தியுள்ளது. ஜா-எல நகரசபை உறுப்பினர் கிறிஸ்ரி கல்தேரா கட்சி நடவடிக்கைகளில் பங்குபற்றுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

## ஊடக சபை ஒன்றை அமைக்க 'ஸ்கிறிப்நெற்' நடவடிக்கை

### இதற்கான கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,ஜுலை9

யாழ்குடாநாட்டில் ஆக்கபூர்வமான ஊடக சபையொன்றை அமைத்துச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக 'ஸ்கிறிப் நெற்' அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஆரோக்கியமான திரைப்பட மற்றும் ஊடகத்துறையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இவ்வமைப்புச் செயற்படவுள்ளதாக 'ஸ்கிறிப்நெற்' அமைபபின் யாழ்திட்ட இணைப்பாளர் ஏ.ஞானதாஸ் தெரிவித்துள்ளார்.

இச்சபையை அமைப்பதற்கான அடிப்படைச் சட்ட நிர்வாக விடயங்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில 'ஸ்கிறிப் நெற் நிறுவனத்தின் முகாமை இயக்குநர் இஜுன் மாஸ்ரர் கலந்துகொள்கிறார்.

இந்நிகழ்வில் செயற்திறன் மிக்கவர்களை கலந்துகொள்ளுமாறும் -

கலந்துகொள்பவர்கள், இச் சபையின் ஆரம்ப உறுப்பினராகவும் ஆலோசகராகவும் இணைந்து செயற்பட முடியுமெனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஆங்கிலத் தினப் போட்டி

யாழ்ப்பாணம்.ஜுலை9

யாழ்.கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் தரம் 3 முதல் 11 வரையான பாவோதல் மற்றும் தரம் 12, 13 இற்கான பேச்சு ஆகிய போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென யாழ்.கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.எஸ்.தங்கராஜா அறிவித்துள்ளார். (ஒ-9-30)

## பேச்சுக்கள் மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியும்.

"தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானித்தது எமக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. எனினும், எமது மக்கள் சுதந்திரமாக மகிழ்ச்சியுடன் இவ்விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளும் சூழ்நிலை இங்கு இல்லை. இராணுவத்தினரின் திடீர் ரோந்துகள், சோதனை நடவடிக்கைகள் மற்றும் புதிய காவலரண்கள் நிறுவுகின்றமை எமது மக்கள் மத்தியில் அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளன. பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு ஓர் அமைதியான சூழல் உருவான பின்பே இங்கு தேசிய விளையாட்டு விழாவை நடத்துவது சாலப்பொருத்தமானது" - என்று தெரிவித்தனர்.

இதையடுத்து, தேசிய விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இந்த விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு கால அவகாசம் போதுமானதாக இருக்காது என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், தேசிய விளையாட்டு விழா அநேகமாக யாழ். மாவட்டத்தில் இருந்து வேறு ஒரு மாவட்டத்துக்கு மாற்றப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விழா பதுளை மாவட்டத்துக்கு மாற்றப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

தேசிய விளையாட்டு விழாவுக்கு என ஒதுக்கப்பட்ட நிதிகளும் திரும்பப்பெறப்படலாம் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (ம-3-8)

(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)

# ஈரான் சகோதரிகளின் வரலாற்றுச் சிகிச்சை துயரத்தில் முடிந்தது!

சிங்கப்பூர்சிற்றி,ஜூலை9


சகோதரிகள்

தலையொட்டிப் பிறந்த ஈரானியச் சகோதரிகளைப் பிரிக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சத்திரசிகிச்சை பெரும் துயரத்தில் முடிந்துள்ளது. நீண்ட நேர சத்திரசிகிச்சையின் பின்னர் சகோதரிகள் தனித்தனியே பிரிக்கப்பட்ட போதும் நேற்றுப் பிற்பகலில் அவர்கள் இருவரும் உயிரிழந்தனர்.

சத்திரசிகிச்சையின்போதே லேடனின் உயிர் முதலில் பிரிந்தது. அவரது சகோதரி லேலா உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். ஒன்றரை மணி நேரத்தின் பின்னர் அவரது உயிரும் மெல்ல இந்த உலகை விட்டுப் பிரிந்தது. அவர்கள் இருவரும் மரணமானதை வைத்தியசாலை அதிகாரிகள் உறுதிப் படுத்தினர்.

29 வயதான வழக்கறிஞர்களான இந்தச் சகோதரிகளின் மரணத்துக்கு நீண்டநேர சத்திரசிகிச்சையின்போது பெருமளவு இரத்தம் வெளியேறியமையே காரணம் என்று 'ரபிள்ஸ்' மருத்துவமனைப் பேச்சாளர் டாக்டர் பிரேம் குமார் நாயர் தெரிவித்தார். அவர்களின் மரணம் குறித்து அறிவிப்பது தமக்கு பெரும் கவலையை அளிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தச் சத்திரசிகிச்சையின் போது மருத்துவர்கள் மூன்று கட்டங்களை வகுத்திருந்தனர். முதலாவது மண்டையோட்டைப் பிளந்து இரண்டு மூளைகளுக்குமான குருதி வழங்கல்களை பைபாஸ் ( Bypss) சிகிச்சை மூலம் தனித்தனியாக்குதல். இரண்டாவது மூளைகளைச் சுற்றியுள்ள குருதி நாளங்கள், செல்வழிகளை வெவ்வேறாகப் பிரித்தல். மூன்றாவது இரண்டு மண்டையோடுகளையும் தனித்தனியாக மூளைகளின் செயற்பாட்டை உறுதிப்படுத்துதல்.


சிகிச்சைக்கு முன் முத்தமிட்டு அனுப்பிய நண்பி.

இந்த மூன்று கட்டங்களில் முதலாவது கட்டத்தை மருத்துவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றினர். நேற்றுமுன்தினம் அதிகாலையில் இரண்டாம்கட்ட சத்திரசிகிச்சை ஆரம்பமானது.

இரண்டு சகோதரிகளதும் தனித்தனி மூளைகளுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் ஒரே குழாயை வெட்டி யாராவது ஒருவருக்கு லேடனின் வலது தொடையில் இருந்து எடுத்த இரத்தக் குழாயைப் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது. மிகவும் கடினமான இந்த சத்திரசிகிச்சையும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், வெட்டிஎடுக்கப்பட்ட இரத்தக் குழாய் யாருக்கு பொருதப்பட்டது என்ற தகவலை மருத்துவர்கள் வெளியிடவில்லை. சத்திரசிகிச்சையின் பின்னர் இருவரது மூளைகளுக்கும் இரத்தம் தங்கு தடையின்றிக் கிடைத்ததைக் கண்டதும் மருத்துவர்கள் உற்சாகமடைந்தனர். இதைத் தொடர்ந்து மூளையை முழுமையாகப் பிரித்து சகோதரிகளைத் தனிமைப்படுத்தும் மூன்றாவது கட்டத்தை அவர்கள் ஆரம்பித்தனர்.

மிகக் கவனமாக மில்லிமீற்றர் மில்லிமீற்றராக இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு மருத்துவர்கள் எதிர்பாராத சிக்கல் ஒன்றை எதிர்கொண்டனர். சகோதரிகளின் இரு மூளைகளும் மிக மிக நெருக்கமாக இருப்பதை மருததுவர்கள் கண்டுபிடித்தனர். சிறு வயதாக இருந்தால் இருவரது மூளைகளையும் இலகுவாகப் பிரித்துவிடலாம். சகோதரிகள் பெரியவர்களாக வளர்ந்து விட்டதனால், அவர்களது மூளைகள் ஒன்றோடு ஒன்று ஒருங்கிணைந்தது போன்று மாறிவிட்டன. இது மருத்துவர்களுக்கு திடீர் சிக்கல்களை ஏற்படுத்தின. இதுபோதாதென்று நேற்றுமுன்தினமிரவு சகோதரிகளுக்கு இரத்த அழுத்தம் அதிகரித்தது. இதனால் தொடர்ந்து சத்திரசிகிச்சையை மேற்கொள்ளமுடியவில்லை.

அவர்களது இரத்த அழுத்தத்தை கண்காணிப்பதற்கு தனி மருத்துவர் குழு செயற்பட்டது. நேற்றுக் காலையில் சகோதரிகளின் இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இதைத் தொடர்ந்து மூளைகளைப் பிரிக்கும் பணி தொடர்ந்தது.


மருத்துவமனையில் தீவிர சத்திரசிகிச்சை.

நேற்று அவர்களின் மூளைகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. மில்லிமீற்றர் மில்லிமீற்றராக மூளையை வெட்டி அவற்றைத் தனித்தனியாக்குவதற்கு மட்டும் மருத்துவர்களுக்கு 21 மணித்தியாலங்கள் தேவைப்பட்டது. இந்த சத்திரசிகிச்சை சகோதரிகளை கதிரையில் இருத்திவைத்தே மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சிகிச்சைக்கு 'ஒப்பரேஷன் ஹோப்' எனப் பெயரிடப்பட்டிருந்தது.

நேற்று மதியம் அளவில் 2 பேரின் மூளைகளும் தனித்தனியாக்கப்பட்டன. 2நாள் அபாயகரமான - தொடர்ச்சியான - சத்திரசிகிச்சைக்குப் பின்னர் அந்த அபாயகரமான பிரிப்பு நடந்து முடிந்துள்ளது. இரு சகோதரிகளும் தனித்தனியே பிரிக்கப்பட்ட பின்னர் அவர்களது தலைகளை தோல் மற்றும் தசைகளைக் கொண்டு மூடும் பணியை மருத்துவர்கள் மேற்கொண்டனர்.

ஆனால், மூளைகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே லேடனின் நிலை கவலைக்கிடமாகியது. அவரது தலையில் இருந்து கூடுதலான இரத்தம் வெளியேறி விட்டதால் அவர் ஆழ்ந்த மயக்க நிலைக்குச் சென்றார். சிறிது நேரத்தில் இந்த உலகில் இருந்து அவரது உயிர் பிரிந்தது.

அவரது மரணம் பற்றிய தகவல் உடனடியாக அறிவிக்கப்பட்டது. அந்தத் தகவலைக் கேட்டதும் மருத்துவமனையில் கூடியிருந்த ஈரானியப் பெண்கள் பலர் கதறி அழுதனர்.


மரணச் செய்தி கேட்டதும் கதறும் ஈரானியப் பெண்.

லேடன் உயிரிழக்கும் சமயத்தில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த லாலேயைக் காப்பாற்ற மருத்துவர்கள் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டனர். எனினும் ஒன்றரை மணிநேரத்தின் பின்னர் அவரும் உயிரிழந்தனர்.

இந்த சத்திரசிகிச்சைக்கு மொத்தமாக 53 மணித்தியாலங்கள் எடுத்துள்ளது.

மருத்துவத்தைப் பொறுத்தவரையில் மூளையைப் பிரிக்கும் விடயத்தில் இந்த சத்திரசிகிச்சை கிட்டத்தட்ட வெற்றிகரமானது என்று தெரிவிக்கப்படுகின்றது. 1952ஆம் ஆண்டில் முதன்முதலாக மூளையைப் பிரிக்கும் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட பின்னர் தற்போதே அது சாத்தியமாகி உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

1996இல் இந்த சகோதரிகளைப் பிரிக்கும் சத்திரசிகிச்சையை மேற்கொள்ள ஜேர்மனிய மருத்துவர்கள் மறுத்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சகோதரிகள் ஈரானில் துணிச்சலுக்கும் அவர்கள் கல்வியில் பெற்ற வெற்றிக்கும் பெரும் புகழ் பெற்றவர்கள்.

## சூடானில் அனர்த்தம்

# விமானம் நொறுங்கி 115 பயணிகள் பலி!

### குழந்தை ஒன்று அதிசயமாக உயிர் தப்பியது

பேர்போர்ட்,ஜூலை9

சூடானில் பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதில் அதில் இருந்த 115பேர் பலியாகினர். விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தல் விபத்துக்குள்ளானது. விமானத்தில் இருந்த 2வயதுக் குழந்தை ஒன்று உயிருடன் தப்பியதாகச் சொல்லப்படுகின்றது. உயிரிழந்தவர்களில் 105 பேர் பயணிகள் 10பேர் விமானப் பணியாளர்கள்.

செங்கடலுக்கு அருகே உள்ள விமான நிலையமான போர்ட் சூடானில் இருந்து புறப்பட்ட விமானம் தலைநகர் கார்ட்டோம் நோக்கிப் புறப்பட்ட சமயம் இந்த விபத்து இடம்பெற்றது.

புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விமானத்தில் கோளாறு இருப்பதாக விமானி கட்டுப்பாட்டு அறைக்கு அறிவித்தார். தொழில்நுட்பக் கோளாறுகளை விமானத்தில் தான் உணர்வதாகவும் அவர் தெரிவித்தார்.

உடனடியாக விமானத்தை விமான நிலையத்துக்கு திருப்புமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால், விமானம் விமான நிலையத்துக்கு திரும்பி தரையிறங்க எத்தனிக்கையில் வீழ்ந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் இருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பிய அந்த ஆண் குழந்தை தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு காலை அகற்றவேண்டி இருந்ததாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். விமானம் விபத்துக்குள்ளான போது 14 சிறுவர்கள் அதில் இருந்துள்ளனர். அவர்களில் 4 குழந்தைகளும் அதில் அடக்கம்.

இந்த விபத்து குறித்து தகவல் தெரிவித்த சூடான் விமான நிறுவன இயக்குநர், "நாங்கள் எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு முன்பே விதி முந்திக்கொண்டு விட்டது" - என்றார். (ம)

# ஆபிரிக்க நாடுகளுக்கு அதிபர் புஷ் விஜயம்!

வாஷிங்ரன்,ஜூலை9

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆபிரிக்க நாடுகளுக்கான முக்கியமான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை நேற்று ஆரம்பித்தார்.

ஐந்து நாள்களில் 5 நாடுகளுக்கு விஜயம் செய்யும் அவரது திட்டத்தின் படி நேற்று அவர் செனகல் நாட்டுக்கு சென்று சேர்ந்தார்.

செனகல் ஜனாதிபதி அப்துல்லயா விமானநிலையத்தில் அதிபர் புஷ்ஷையும் அவரது மனைவியையும் வரவேற்றார்.

இந்த விஜயத்தின் போது அதிபர் புஷ் தென்னாபிரிக்கா, பொஸ்வானா, உகண்டா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளுக்கும விஜயம் செய்யவுள்ளார்.

ஆபிரிக்க நாடுகளுக்கு அமெரிக்கா செய்யவுள்ள உதவிகள் குறித்து விவரிப்பதற்காக அதிபர் புஷ் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

லைபீரியாவில் அமெரிக்கப் படைகள் வந்திறங்கவேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வரும் நிலையில் புஷ்ஷின் ஆபிரிக்க விஜயம் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. (ம)


நேற்று செனகலுக்கு வந்து சேர்ந்த அதிபர் புஷ் செனகல் அதிபருடன்...

# சீனாவில் பெருவெள்ளம் 18 பேர் உயிரிழந்தனர்!

பீஜிங்,ஜூலை9

சீனாவின் கிழக்குப் பகுதியை பெரும் வெள்ளப்பெருக்கு தாக்கியுள்ளது. குறைந்தது 18 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல லட்சக்கணக்கானவர்கள் தமது வீடு வாசல்களை இழந்து தவிக்கின்றார்கள்.

வெள்ளம் கட்டுப்பாட்டை மீறிப் பாய்வதனால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள மூன்று மாகாணங்கள் வெள்ளத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 3லட்சத்து 80 பேர் அந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

ஒரு லட்சத்து 15ஆயிரம் வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் பலர் நிர்க்கதியான நிலையில் நிற்கின்றனர்.

1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சீனாவில் ஏற்பட்டுள்ள மிக மோசமான வெள்ளப்பெருக்கு இதுவாகும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)

# பிரிட்டிஷ் பிரதமர் பிளயரிடம் நாடாளுமன்ற குழு விசாரணை

லண்டன்,ஜூலை9

ஈராக் மீதான போரை நடத்த நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கையில் தவறான விளக்கங்களை கூறினாரா என்பதை அறிவதற்காக பிரதமர் ரொனி பிளயர் மீது நேற்று பிரிட்டிஷ் நாடாளுமன்றம் விசாரணை நடத்தியது.

நாடாளுமன்ற வெளிவிவகார இணைப்புக்குழு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு பிளயர் பதிலளித்தார். ஈராக் போரை நியாயப் படுத்திப் பதிலளித்தார்.

பிளயரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தில் போருக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வுத் தகவல்கள் சரியானது என்று கூட்டுப் புலனாய்வுக் குழு மதிப்பீடு செய்துவிட்டது. நாடாளுமன்ற அங்கீகாரம் இன்றி யுத்தத்திற்கு படையினரை அனுப்புவதற்கு நான் நினைக்கவில்லை.

எமக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களில் 90 சதவீதம் வெளியாரிடம் இருந்து பெறப்பட்டது என்பது பொய். ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்தன என்பதற்கான ஆதாரங்கள் விரைவில் கிடைக்கும் - என்றார். (ம)

உ

காரைநகர்

சடையாளி ஸ்ரீ ஞானபைரவர் கோயில்

## மஹா கும்பாபிஷேகம்

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆனித்திங்கள்
26 ஆம் நாள் (10.07.2003) வியாழக்கிழமை
முற்பகல் 9 மணி 29 நிமிடம் முதல்
10 மணி 53 நிமிடம் வரையான சுபமுகூர்த்த சுபவேளையில்

மஹா கும்பாபிஷேகம்

நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.
அடியார்கள் அனைவரும் திரண்டு வந்து
அவன் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஸ்ரீ ஞானபைரவர் தேவஸ்தானம்,
சடையாளி,
காரைநகர்.

- வழிபடுவோர்.

விளம்பர அனுசரணை - கலைவாணி நகை மாளிகை
111 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(19996) (24-12-14)

## உடன் தேவை

ஸ்பின்டிங் (பானை)
வேலை தெரிந்தவர்கள்
உடனே தேவை.
தொடர்பு:-

**சாமி அன்கோ**

இல. 313, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

(20006) (25-24-12-14)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

**The Jaffna Education Centre**

சாந்தி சினிமா முன்பாக (மேல் மாடி)

**Spoken English with Grammar**

*சிங்களம், Short hand Typing*

ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. முடிவில் 'சான்றிதழ்' வழங்கப்படும்.
புதிய பிரிவு ஆரம்பம்: 10.07.2003.

(20002) (24-12-14)

நிர்வாகி: இ.லோகநாயகி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின்
முன்னாள் அதிபர்
திருவாளர்
**எஸ்.எஸ். தங்கராஜா**
அவர்கள் யாழ்.கோட்டக்கல்வி
அதிகாரியாக பதவி உயர்வு
பெற்றதையிட்டு அவரை உளமாரப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

(19979) (26-24-12-14)

## காணி தேவை

இளம் குடும்பமொன்று யாழ். பிரதேசத்தில் மீளக்குடியேறுவதற்கு 4 பரப்புக் காணி தேவைப்படுகின்றது. காணி யாழ். - பலாலி வீதிக்கு அருகில், திருநெல்வேலிச் சந்திக்கு அப்பால் விரும்பத்தக்கது. விற்க விரும்புபவர்கள் நேரில் தொடர்புகொள்ளவும். இடைத்தரகர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள். தொடர்புகளுக்கு:
T.P.No. 0041318692443

(21-19-14-18-12-24) (19874)

## குகன் - ஆவரங்கால்

அடிப்படையில் இருந்து பேச்சு
ஆங்கிலம்
புதிய பிரிவுஆரம்பம்:
09.07.2003 புதன்
10.30 (பழையநேரம்)
ஆசிரியர்:
திரு.நிஷாந்தன்
உடன் அனுமதிகளைப் பெறவும்.

(30-24-12-14) (19984)

## நினைவலைகள்



மலர்வு 22 - 07 - 1971

உதிர்வு 07 - 07 - 2002

**நவரட்ணராஜா ரவிசங்கர்**

(மருத்துவ மாணவன்)

நண்பா,
சொல்ல வார்த்தையில்லை சோகம் அடைக்கிறது
இல்லும் பகலும் உந்தன் அழகான ஊர் சென்று
சொல்லும் பிணியெல்லாம் சுகமாக்க வருவாயென
சுற்றமெல்லாம் காத்திருக்க
கங்கைவளம் கொழிக்கும் கங்குவேலியிலே
கதிரொளி பரப்பவந்து காரிருளில் மறைந்தாயோ?
காணத்தவிக்கின்றோம்; கண்கலங்கித் தேடுகின்றோம்
வானகத்தில் எங்கேயோ வண்மையுடன் நீயிருப்பாய்
வருடங்கள் போனாலும் வற்றாது உன் நினைவுகள்.

வைத்திய நண்பர்கள்
(17 ஆம் அணி).

(19989)(24-14-12)

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள 'புத்தகக் கட்டல்' 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 /= - 100/= வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்ய தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

இல. 212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-222 5542

(C/28764) (26-24-12-14)

# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத்
தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.
தகைமையுடையவர்கள் தங்களது சுயவிவரமடங்கிய வேண்டுகைகளை
2003.07.20ஆம் நாளிற்கு முன்னதாக
எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

பணிநிலை :- 01) ஆய உதவியாளர் (ஆண்கள்)
02) ஆய அலுவலர் (ஆண்கள்)

கல்வித் தகைமை :

பணிநிலை (01) :- க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

பணிநிலை (02) :- க.பொ.த.(உ/த)பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

நடுவப்பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

(C/28677) (25-22-24-14-12)

உதயன்

## சு.க. - ஜே.வி.பி. கூட்டால் நிலைமை விபரீதமாகலாம்

நமது நாட்டையே உலுப்பும் அதிமுக்கிய தேசியப் பிரச்சினையாக இருப்பது இனப்பிணக்கு, ஈழத் தமிழர்களின் உரிமைக்கான போராட்டம்.

அது குறித்து தங்களின் எதிர்காலத்திட்டம் என்னவென்பது பற்றி ஒரு கொள்கை வகுக்காமல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்திருக்கின்றன.

இவ்வாறான போக்குக் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கின்றது.

ஈழத்தமிழர்களுக்கு உரியதை - உரிமையை - வழங்குவதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் மறுத்து வந்ததே இனப் பிணக்கு பெரும் போராக வெடித்து, நாட்டைச் சீரழிக்கக் காரணமாயிற்று என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இனிமேலும் யுத்தம் தொடருமானால் அதனை நாடும் மக்களும் தாங்க முடியாது. எனவே, எப்படியும் சமாதான வழிகளில் - அமைதி முறையில் - நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்படுவது அவசியம் என்பது நாட்டுக்குள்ளும் நாட்டுக்கு வெளியில் சர்வதேச மட்டத்திலும் நன்கு உணரப்பட்டிருக்கின்றது.

தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான உரிமைகளை - ஆட்சி அதிகாரத்தை - அதிகாரப் பகிர்வை - வழங்குவதன் மூலம் நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்படவேண்டும் என்பதே நாட்டு மக்களில் பெரும்பாலானோரின் அபிலாஷை; விருப்பம்; நம்பிக்கை.

அது ஒன்றே அமைதி வழியில் நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதற்கு ஒரேயொரு வழியாகும்.

இராணுவப் பலத்தில் பருத்து நிற்கும் இலங்கை அரசும், கொள்கைப் பிடிப்பில் மலைபோன்று உறுதியாக நிற்கும் இராணுவ சக்தியான விடுதலைப் புலிகளும் விடாப்பிடியான யுத்தம் ஒன்றில் தொடர்ந்து ஈடுபடுவார்களேயானால் பேரழிவு நாட்டுக்கும் மக்களுக்கும்தான். அத்தகைய யுத்தத்தைத் தவிர்த்து, சமரச வழியில் சமாதானம் காணும் முயற்சியில் பிரதமர் ரணிலின் அரசும் புலிகளின் தலைமையும் உறுதியுடன் ஈடுபட்டிருக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான், அமைதிப் பேச்சுகளுக்கு - சமாதான முயற்சிகளுக்கு - சமரச நடவடிக்கைகளுக்கு - முற்றிலும் எதிர்ப்புக் காட்டும் ஜே.வி.பியுடன் கூட்டமைக்கத் தயாராகியிருக்கின்றது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி.

தற்போதைய சமாதானப் பேச்சுக்களில் - முயற்சிகளில் - ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாகப் பங்குபற்றுவோர் விடுதலைப் புலிகள். அவர்களை இராணுவ ரீதியில் அழித்துவிட்டுத்தான் அடுத்த நடவடிக்கை என்று பேரினவாதக் கூச்சல் போடும் கட்சி ஜே.வி.பி.

அந்த ஜே.வி.பியோடுதான், மாற்று அரசு அமைக்கக் கூடிய பெரும்பான்மையினக் கட்சியான - நிறைவேற்று அதிகார ஜனாதிபதியினுடைய கட்சியான - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டமைக்க முயல்கின்றது. அதுவும், அதிமுக்கிய தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு எவ்வழியில் தீர்வு காண்பது என்ற திட்டவட்டமான கொள்கை வகுக்காமல் இந்தக் கூட்டமைப்புக்கு முழு மூச்சில் தயாராகிவிட்டது ஸ்ரீல.சு.கட்சி.

இதனால், இத்தகைய கூட்டமைப்புக்கான உடன்பாடு, தமிழர் விடுதலைக் கூட்டணி சுட்டிக் காட்டுவது போல, தமிழர் பிரச்சினைக்கு பேச்சு மூலம் அரசியல் தீர்வை எட்டுவதற்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்பது முழு உண்மை.

எப்படியும் ஐ.தே. முன்னணி அரசை வீழ்த்தி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி தாங்கள் அமைச்சர்களாகி விடவேண்டும் என்ற குறுகிய நோக்கத்துக்காக ஜே.வி.பியுடன் கூட்டமைக்கத் தயாராகின்றார்கள் ஸ்ரீல.சு.கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள்.

சிலசமயம் அந்த முயற்சியில் அவர்கள் வெற்றி பெறலாம். தற்போதைய நாடாளுமன்றத்தில் உள்ள சில ஐ.தே. முன்னணி எம்.பிக்களை 'வளைத்து' பிடித்துக்கொண்டு ஆட்சி அதிகாரத்தை அவர்கள் கைப்பற்றலாம். ஸ்ரீல.சு.கட்சியினரோடு தொங்கிக் கொண்டு, பேரினவாதப் போக்குடைய ஜே.வி.பியும் ஆட்சி அதிகாரத்தில் பங்குபோட்டுக் கொண்டு அதிகாரக் கதிரைக்கு வரலாம்.

ஆனால், அத்தகைய விளைவுகளினால் பாதிக்கப்படப்போவது தற்போதைய சமாதான முயற்சிகள்தான்; அமைதி நடவடிக்கைகள்தான்.

அதன் பெறுபேறு விபரீதமாக இருக்கும். இதை சம்பந்தப்பட்டோர் முன்கூட்டியே உணர்ந்துகொள்வது நல்லது.

## பதிவாளர் நாயகம் வடக்குக்கு வருகை

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பதிவாளர் நாயகம் எல்.கே. ரத்னசிறி நாளை வியாழக்கிழமை வடபகுதிக்கு வருகை தரவுள்ளார்.

யுனிசெவ் அமைப்பின் பிரதிநிதிகளுடன் தரைவழியாக வரும் அவர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் உதவிப் பதிவாளர் நாயகங்களையும் சந்திக்கவுள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ள எல்லோருக்கும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கும் திட்டம் ஒன்றை யுனிசெவ் அமைப்பு நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தைச் சரியாகச் செயற்படுத்துவதற்கு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் போட்டோ பிரதி இயந்திரங்கள் இல்லாமை ஒரு காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், இந்த மாவட்ட செயலகங்களில் உள்ள பதிவாளர் அலுவலகங்களுக்கு 'போட்டோப பிரதி' இயந்திரங்கள் ஒவ்வொன்றை அன்பளிப்புச் செய்ய யுனிசெவ் அமைப்பு முன்வந்துள்ளது. பதிவாளர் நாயகத்தின் இந்த விஜயத்தின்போது அந்த 'போட்டோ பிரதி' இயந்திரங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு உதவிப் பதிவாளர் நாயகங்களிடம் வியாழனன்று கையளிக்கப்படும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை பதிவாளர் நாயகமும் யுனிசெவ் அதிகாரிகளும் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். காலையில் அரச அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசுவர். பின்னர் பருத்தித்துறை பதிவாளர் அலுவலகத்துக்கும் அவர்கள் சென்று பார்வையிடவுள்ளனர். அங்கும் ஒரு 'போட்டோப் பிரதி' இயந்திரத்தையும் மின்பிறப்பாக்கி ஒன்றையும் அன்பளிப்புச் செய்வார்கள். (ம-3-8)

## நாட்டு நடப்பு

### ஆர் எனை மதிப்பார்?

கயல்விழி, 'கனிமொழி' என்பாளுக்கு
கலியாணம் பல பேசலுற்றார்
அயலூர் வாழ் அழகன் அன்னான்
'ஆதித்தன்' எனப் பேருடையான்
பயபக்தி மிகவும் மிக்கான்
பண்பு சேர் பட்டதாரியாவான்
இயல் இசை நாடகத்தில்
ஈடுபாடு மிக உடையான்
நயமுடன் கவிதை ஆக்கும்
நந்தமிழ் கவிஞன் ஆவான்
கையிலோ சிகரெட் ஏந்தான்
கால் சட்டை பெல்சாய் மாட்டான்
செய்ய வெண் நீறதனை நாளும்
செப்பமாய் பூசிக்கொள்வான்
தையலாள் நேரில் சென்று
தயக்கமின்றி இவனைப் பார்த்தாள்
ஐயகோ! இவனைக் கட்டில்
ஆர் என்னை மதிப்பார்? என்றாள்.

\- விகடகவி.

## தேசிய விளையாட்டு விழா வரவேற்பில் 3,000 மாணவரை ஈடுபடுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள தேசிய விளையாட்டு விழாவின் ஆரம்ப, இறுதிநாள் வைபவங்களில் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த 3.ஆயிரம் மாணவர்களை ஈடுபடுத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்றுக்காலை யாழ். செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. விளையாட்டுத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகள், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி, வலயக் கல்விப்பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தேசிய விளையாட்டு விழாவின் ஆரம்ப, இறுதிநாள் வரவேற்பு நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட மாணவர்களை ஈடுபடுத்துவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். கன்னியர்மட வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி, புனித பரியோவான் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, புனிதபத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இருந்து தலா 500 மாணவர்களை இதற்கெனத் தெரிவுசெய்து அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

### 2001ஆம் ஆண்டு 'றான்' அமைப்பினால்

## 183 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட நிதியில் ரூ. 5 கோடிக்கு கணக்குக் காட்டப்படவில்லை!

யாழ்ப்பாணம்,ஜூலை9

2001ஆம் ஆண்டு 'றான்' அமைப்பினால் யாழ்.குடாநாட்டில் உள்ள 183 பாடசாலைகளின் புனரமைப்புக்கு என வழங்கப்பட்ட 8கோடி 90லட்சம் ரூபா நிதியில் பெருமளவு நிதி பயன்படுத்தப்பட்டமைக்கான கணக்குகள் இதுவரை யாழ். செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 5கோடியே 30லட்சம் ரூபாவுக்கு இவ்வாறு கணக்குக் காட்டப்படவில்லை என்று கூறப்படுகின்றது. 4கோடி 70லட்சம் ரூபா பெறுமதியான வேலைகளுக்கே யாழ்.செயலகத்துக்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது 'றான்' நிதி ஒதுக்கீட்டில் இடம்பெற்ற திட்டங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இந்த நிதிகளுக்கான கணக்குகளை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு யாழ்.செயலகம் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் கேட்டுள்ளது.

இதனையடுத்து, விழித்துக் கொண்ட கல்விப் பணிப்பாளர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் இருந்து உடனடியாக கணக்குகளைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுள்ளனர். இல்லையேல், அதிபர்களின் சம்பளங்கள் இடைநிறுத்தப்படும் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கடும் அறிவிப்பு விடுத்துள்ளனர்.

ஒதுக்கப்பட்ட நிதியை சில பாடசாலைகள் உரியவாறு பயன்படுத்தாமல் அப்படியே வைத்திருப்பது தற்போது தெரிய வந்துள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். (ம-3)

## அமெரிக்க கண்ணி அகற்றும் குழுவினர் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பணிபுரிவர்

யாழ்ப்பாணம்,ஜூலை9

அமெரிக்க கண்ணிவெடி அகற்றும் நிறுவனமாகிய 'றொங்கோ' அமைப்பு யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

இதுபற்றி ஆராய்வதற்கென அந்த அமைப்பின் செயற்றிட்ட முகாமையாளர் வில்லியம் ஜேஹீட் நேற்று யாழ்.வந்தார்.

அவருடன் வாஷிங்ரனில் உள்ள மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் அதிகாரியான போரா நிற்லென்டும் வந்தார்.

அமெரிக்க கண்ணிவெடி அகற்றும் 'றொங்கோ' அமைப்பின் குழுவினர் கடந்த சில மாதங்களாக யாழ்.குடாநாட்டில் சாவகச்சேரி சாலைப் பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இக்குழுவினரின் ஒப்பந்தகாலம் கடந்தமாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்தது. எனினும், யாழ்.குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையையும், மீள்குடியமர்வையும் கருத்திற்கொண்டு கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளைத் துரிதமாக்குவதற்கு 'றொங்கோ' அமைப்பு தொடர்ந்து இங்கு கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமென யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதற்கமைய, 'றொங்கோ' அமைப்பை மீண்டும் இங்கு மிதிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபடுத்துவது தொடர்பாக நேற்று யாழ்.வந்த குழுவினர் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பில் அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரி கிறிஸ்லோங், பொதுமக்கள் தொடர்பு அதிகாரி பத்மினி இராஜதுரை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கை - அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஒப்பந்தத்திற்கு அமைவாக அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவுடன் இணைந்து இங்கு கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவது தொடர்பாகவும், கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் இராணுவ பொறியியல் பிரிவுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது தொடர்பாகவும் ஆராயும் நோக்குடனே அவர்கள் விஜயம் செய்துள்ளதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

இக்குழுவினர் யாழ்.செயலகத்தில் உள்ள கண்ணிவெடி அகற்றும் பிரிவின் இணைப்பாளரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அதன்பின், சரசாலை, பளை ஆகிய பகுதிகளுக்கும் சென்று கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்வையிட்டனர். (ஐ-8)

### நாளை

ஆனி 25
வியாழக்கிழமை
(10.07.2003)
திதி : ஏகாதசி
முற்பகல் 7.58
நட்சத்திரம்: விசாகம்
காலை 6.13 வரை.
சயன ஏகாதசி விரதம்
சுபநேரம் : 7.28-8.58
ராகுகாலம் : 1.28-2.58
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

நீங்கள் நேர்மையானவரா? அப்படியானால் தடைகளையும் துயரங்களையும் கண்டு அஞ்சாமல் உண்மை வழியில் நடவுங்கள்!

## படையினரின் சோதனை வடமராட்சியில் அதிகரிப்பு

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில தினங்களாக படையினரின் ரோந்து மற்றும் திடீர் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் வல்லிபுரக் கோயிலடிப் பகுதியில் வைத்து பருத்தித்துறை - மருதங்கேணி வீதியால் பயணம் செய்தோரும் வாகனங்களும் வழிமறித்து சோதனையிடப்பட்டன. மந்திகையை அண்டிய கிராமம் ஒன்றின் ஊடாக இராணுவத்தினர் கால் நடையாக ரோந்து சென்றனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மந்திகை சந்தையடிப் பகுதி, வதிரிச் சந்தி ஆகிய இடங்களில் வாகனங்களில் வந்திறங்கிய படையினர் திடீரென வீதித்தடைகளைப் போட்டு சில மணிநேரம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்தே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (ந-173)

# இலங்கை வங்கி
## அறிவித்தல்

**திருமதி இராதாகிருஷ்ணன்**
**வடிவாம்பாள்**

**முகவரி 1: "சோலை" வித்தியாலய வீதி, யாழ்ப்பாணம்.**
**முகவரி 2: 238/1, காலிவீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3.**
என்பவரை, அவரது வங்கிக் கணக்கு சம்பந்தமாக உடனடியாக எங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*உதவிப் பொதுமுகாமையாளர்,*
*வடபிராந்தியம்,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தொலைபேசி இல.:
222-6095
222-3126
222-2735

(C/28820) (29-24-12-14)

# வாழ்த்தி மனமகிழ்கின்றோம்



**திருவாளர் த.கணேஷ்**
உபதபால் அதிபர்,
*பளவத்தை வீரபத்திர கோயிலடி, பொலிகண்டி.*



**திருவாளர் மா.விஜயரத்தினம்**
முன்னாள் மேற்பார்வையாளர்,
தென்னை, பனை அபிவிருத்திச் சபை,
*கரகத்தாம்புலம், கொற்றாவத்தை.*


**பெரியப்பாக்கள் இருவரும் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டதையிட்டு இவர்களை வாழ்த்தி மனமகிழ்வு அடைகின்றோம்.**

செல்வி நிருத்தனா இராசசேகரன்,
செல்வன் இராசசேகரன் சுஜாந்தன்,
செல்வன் இராசசேகரன் ஆருரன் (பெறாமக்கள்).

(19981)(24-14-12)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 - 01 - 1958



மறைவு
20 - 06 - 2002

## அமரர் முருகன் தங்கத்துரை

திதி (ஏகாதசி - 09.07.2003)

**விறைத்துப் போன உடல்கள் ~ இங்கு**
**விம்மி அழுகின்றன.**
**அதிர்ந்து போன இதயங்கள்**
**அங்கலாய்த்து பொருமுகின்றன ~ நீங்கள்**
**சென்று ஓராண்டானதை எண்ணி**
**ஏங்கித் தவிக்கின்றன.**

*'வளர்மதி'*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

(19962) (24-12-14)

மனைவியும்
உறவுகளும்.

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 - 05 - 1950



மறைவு
09 - 07 - 1995

## திருமதி கமலநாதன் சாவித்திரி
**(பேபி)**

அன்புடைய அம்மாவிற்கு.....
உங்களை நாம் இழந்து இன்று
எட்டு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன.....
எட்டாத தூரமதில் எங்கு
நீவீர் பறந்தாலும்
கட்டாயம் எம் உள்ளமதில்
என்றென்றும் நீவீர் வாழ்வீர்!
நின் முகமும்.... எம் கனி முகமும்
என்றம்மா இனிக்காண்போம்?

**உங்களின் உங்களுடன் இணைந்த அன்பு உள்ளங்களின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களால் என்றும் இறைவனைத் துதிக்கின்றோம்.**

*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*

(19970) (24-12-14)

அன்புக்கணவர், குஞ்சுகள்,
சகோதரர்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள் குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி(புழுங்கல் சிவப்பு நாடு) வழங்கலுக்கான கேள்வி கோரல்

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2003 - ஜூன், ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | | |
|---|---|---|---|---|---|
| | | 2003 ஜூன (MT) | 2003ஜூலை (MT) | 2003ஓகஸ்ட் (MT) | 2003செப்ரெம்பர் (MT) |
| 01 | சாவகச்சேரி | 133 | 133 | 133 | 133 |
| 02 | கைதடி | 65 | 65 | 65 | 65 |
| 03 | கொடிகாமம் | 120 | 120 | 120 | 120 |
| 04 | உடுப்பிட்டி | 37 | 37 | 37 | 37 |
| 05 | கட்டைவேலி நெல்லியடி | 49 | 49 | 49 | 49 |
| 06 | பருத்தித்துறை | 104 | 104 | 104 | 104 |
| 07 | புலோலி | 32 | 32 | 32 | 32 |
| 08 | மருதங்கேணி | 78 | 78 | 78 | 78 |
| 09 | யாழ்ப்பாணம் | 276 | 276 | 276 | 276 |
| 10 | நல்லூர் | 123 | 123 | 123 | 123 |
| 11 | அச்சுவேலி | 132 | 132 | 132 | 132 |
| 12 | நீர்வேலி | 127 | 127 | 127 | 127 |
| 13 | மானிப்பாய் | 112 | 112 | 112 | 112 |
| 14 | பண்டத்தரிப்பு | 84 | 84 | 84 | 84 |
| 15 | அளவெட்டி மல்லாகம் | 61 | 61 | 61 | 61 |
| 16 | தெல்லிப்பழை | 126 | 126 | 126 | 126 |
| 17 | சங்கானை | 167 | 167 | 167 | 167 |
| 18 | சுன்னாகம் | 172 | 172 | 172 | 172 |
| 19 | புங்குடுதீவு நயினாதீவு | 28 | 28 | 28 | 28 |
| 20 | வேலணை | 49 | 49 | 49 | 49 |
| 21 | ஊர்காவற்றுறை | 64 | 64 | 64 | 64 |
| 22 | காரைநகர் | 50 | 50 | 50 | 50 |
| 23 | தீவகம் | 14 | 14 | 14 | 14 |
| 24 | நெடுந்தீவு | 27 | 27 | 27 | 27 |
| | மொத்தம் | 2,230 | 2,230 | 2,230 | 2,230 |

2. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/-வினை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003. 07. 08ஆம் திகதி தொடக்கம் 2003. 07. 22ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10. 00 மணி தொடக்கம் பிற்பகல் 3. 00மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
   இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
3. மீளளிக்க முடியாத கேள்விவைப்பாக ரூபா 500/-ஐ அந்தந்த மாவட்டச் செயலகங்களில் செலுத்தி, அரசாங்க அதிபர்களிடம் இருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்வி கோரப்படவுள்ள அரிசி, புழுங்கல்(சிவப்பு நாடு) அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
5. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2003. 07. 23 பிற்பகல் 2. 00மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3. 00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.
6. கேள்விப்பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.
7. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமாப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக - Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
9. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச்சபை / மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**2003.07.07.**

(சி-28825) (27-24-12-14)

# பொ.ஐ.மு. உறுப்பினர் இல்லம் மீது நேற்றுமுன்தினம் துப்பாக்கிப் பிரயோகம்

வடமேல் மாகாண சபை பொ.ஐ. முன்னணி உறுப்பினர் ரஞ்சித் விஜேசிறியின் இல்லம் மீது நேற்று முன்தினம் அதிகாலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும், எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் அவரது வாகனம் சேதமடைந்திருப்பதாகக் கூறப்பட்டது. நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோது, தான் இல்லத்தில் இருந்தார் எனவும் - சம்பவம் குறித்து தான் பின்னர் பன்னல பொலீஸில் முறையிட்டுள்ளார் எனவும் - விஜேசிறி தெரிவித்திருக்கிறார்.

சம்பவம் குறித்து விசாரணை ஆரம்பித்திருக்கும் பன்னல பொலீஸார் விஜேசிறியின் வாகனத்துக்கு அருகேயிருந்து வெற்றுத் தோட்டாக்கள் பலவற்றைக் கண்டெடுத்துள்ளனர். (ம)

# கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை விரைவில்!

கொழும்பு,ஜூலை9

இந்தியாவின் தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கும் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளன என்று துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பல்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்தப் பயணிகள் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்கக்கூடிய சாத்தியம் உள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. உடன்படிக்கையில் இருநாட்டு அதிகாரிகளும் விரைவில் கைெயாப்பமிட உள்ளனர் என்றும் -

கையொப்பம் இடப்பட்டதும் சேவை உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் - அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய கப்பல்துறை அமைச்சரை உடன்படிக்கையில் கைச்சாத்திட இலங்கைக்கு அழைத்துள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்துடன் தனியார் துறையினரும் இணைந்து இந்தப் பயணிகள் கப்பல் சேவையை நடத்த உள்ளனர். (ம)

# சு.க.-ஜே.வி.பி. கூட்டு ஒப்பந்தத்தை 'நூஆ' வரவேற்கத் தயாராக இல்லை!

## ஜனாதிபதியுடன் பேசவிருக்கிறோம் என்கிறார் ஹிஸ்புல்லாஹ்

கொழும்பு,ஜூலை9

இனப்பிரச்சினை தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கல் மிகவும் அவசியமானதாகும். ஜே.வி.பியினர் அதிகார பரவலாக்கல் விடயத்தில் தொடர்ந்தும் தமது எதிர்ப்பையே தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், ஐக்கிய தேசிய முன்னணி (NUA -நுஆ), ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பியின் உத்தேச கூட்டு ஒப்பந்தத்தை வரவேற்பதற்கு தயாராக இல்லை. இதுபற்றி ஜனாதிபதியுடன் நாம் விரிவாகக் கலந்துரையாடவேண்டியுள்ளது. - இவ்வாறு 'நுஆ' உப தலைவரும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

ஜே.வி.பி., வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கட்சியாகவே நாடாளுமன்றத்திலும், பொது மேடைகளிலும் கருத்துக்களை வெளியிட்டு வருகிறது. முஸ்லிம் மக்களுக்கென கரையோர மாவட்டம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதில் 'நுஆ' தொடர்ந்தும் ஆர்வம் காட்டி வருகிறது. அத்தகைய மாவட்டமொன்றை முஸ்லிம் மக்களுக்கு வழங்குவதற்கு ஜே.வி.பியினர் தயாராக இல்லை.

ஜனாதிபதியும், ஜே.வி.பியினரும் மேற்கொள்ளவுள்ள உடன்படிக்கை என்னவென்பது பற்றி எதுவித விளக்கங்களும் ஜனாதிபதியினால் இதுவரை எமக்குத் தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்பான எவ்வித பேச்சுக்களுக்கும் எமக்கு அழைப்பு விடுக்கவுமில்லை. ஜனாதிபதியிடம் இதுபற்றி விளக்கம் கேட்டபோதும் அவர் மௌனமே சாதித்தார்.

உடன்படிக்கை தொடர்பாக செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்த சில விடயங்களை மட்டுமே நாம் அறியமுடிந்தது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கு கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக ஜனாதிபதி விளக்கமளிப்பார் என்பதும் செய்திப் பத்திரிகைகள் மூலமே தெரியவருகிறது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பங்காளிக்கட்சி என்ற முறையில் கூட்டு ஒப்பந்தம் பற்றிப் பேசுவதற்கு ஜனாதிபதியிடம் நேரத்தை ஒதுக்கித் தரும்படி நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ம)

# தப்பி ஓடிய சிப்பாய் கைக்குண்டுடன் கைது!

கொழும்பு,ஜூலை9

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர் என்று கூறப்படுபவரிடம் கே-400 ரகத்தைச் சேர்ந்த சக்திவாய்ந்த கைக்குண்டொன்றினை பொலீஸார் கடந்த 6ஆம்திகதி கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபரையும் கைதுசெய்துள்ளனர்.

குலவிட பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளைகள், வீட்டுக்குத் தீ வைப்பு போன்ற சம்பவங்களுடன் இவர் தொடர்புடையவர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

குலவிட பகுதியில் வீடு ஒன்றைச் சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் இவரைக் கைது செய்தபோது கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. மத்துகம உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் இந்ரஜித் அமரசிங்கவின் பணிப்பில், பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம)

# அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்த தீர்வே நிரந்தரமாக அமையும் என்கின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு,ஜூலை9

இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வைக் கண்டாலும், ஏனைய கட்சிகளுடன் பேசித் தீர்வுகாண முடியாவிட்டால் அது தீர்வாக அமையாது. அதேபோல், ஏனைய கட்சிகளுடன் பேசித் தீர்வினைக் கண்டு, புலிகளுடன் தீர்வினைக் காண முடியாவிட்டால் அதுவும் தீர்வாக அமையாது. ஆகவே, அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து இனப்பிரச்சினைக்கான தீர்வினை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் இரத்தினபுரியில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் வெற்றி பெறுவதற்கு அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும். அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணையும்போதே புலிகளுடன் காணப்படும் இணக்கப்பாட்டைத் தீர்வாக அடைய முடியும்.

பேச்சுக்களில் இருந்து புலிகள் தற்போது விலகியுள்ளனர். அவர்களை மீண்டும் பேச்சுக்களுக்கு அழைத்துவர நாம் முயற்சி செய்து வருகின்றோம் புலிகளுடன் காணப்படும் தீர்வை முழுநாடும் ஏற்றுக்கொள்வதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். அப்போதுதான் நாட்டில் இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் நிரந்தரத் தீர்வைக் காணமுடியும்.

- இவ்வாறு பிரதமர் தெரிவித்தார்.

# இராணுவச் சிப்பாய் மீது ஏறாவூரில் துப்பாக்கிச் சூடு!

ஏறாவூர் ஏ.கே.எம். வீதியில் வைத்து இராணுவ வீரர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரவு 8.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. 25 வயதுடைய முகம்மது ஹனீபா நசீர் என்பவரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி இதே இடத்தில் வைத்து பொலீஸ் உத்தியோகத்தர் இருவரை சுட்டுக்கொன்றார் என்ற சந்தேகத்தின்பேரில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இவர், கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அவர் சுடப்பட்ட சம்பவத்தை அடுத்து உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு சென்ற ஏறாவூர் பொலீஸார் விசாரணைகளை நடத்தினர்.

தனிப்பட்ட குரோதம் காரணமாகவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# புலிகள்-யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் மட்டக்களப்பில் சந்தித்துப் பேச்சு

## மாவட்ட அகதிகள் நிலை பற்றி ஆராய்ந்தனர்

மட்டக்களப்பு,ஜூலை9

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அகதிகளின் பாதுகாப்புத் தொடர்பாகவும் அவர்களது நலன்கள் குறித்தும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரிகள் திங்களன்று விடுதலைப் புலிகளின் தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

கரடியனாறில் உள்ள 'தேனகம்' விருந்தினர் விடுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. காலை 9.40 மணிக்கு சந்திப்பு ஆரம்பமானது.

இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் ஏனைய இடங்களிலும் வாழும் அகதிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் அவர்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துதல், நிவாரண உதவி விநியோகம் என்பன குறித்து இந்தச் சந்திப்பின்போது முக்கியமாக ஆராயப்பட்டது.

அகதிகளுக்கான ஐநா. தூதரகத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் டேவிட், பாதுகாப்பு அலுவலர் ஊர்வசி பட்டேல் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். புலிகளின் தரப்பில் விசேட தளபதி ரமேஷ், அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் தளபதிகளும் கலந்துகொண்டனர். (ம)



ஸ்கன்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை இங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு கோரி நூற்றுக்கணக்கான பிக்குமார்கள் திங்களன்று கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிங்கள மக்களுக்கு எதிராக விடுதலைப் புலிகளுடன் இணைந்து கண்காணிப்புக் குழு செயற்படுவதாக பிக்குமார் குற்றஞ்சாட்டினர்.

தேசிய பிக்குமார் முன்னணியைச் சேர்ந்த நூற்றுக்கணக்காக பிக்குகள் புறக்கோட்டைப் பகுதியில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு கொள்ளுப்பிட்டியில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தை வந்தடைந்தனர். அங்கு "ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறு" என்று கோஷம் எழுப்பினர்.

புலிகள் தனிநாடு அமைப்பதற்கு கண்காணிப்புக் குழுவினர் உதவி செய்வதாகவும் தெரிவித்த பிக்குகள் தமது கண்டனங்கள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கண்காணிப்புக் குழு அதிகாரிகளிடம் கையளித்தனர். (ம)

# 'மொபெட்' போல மோட்டார் சைக்கிளை பாவித்தால் ஓகஸ்ட் முதல் தண்டனை

கொழும்பு,ஜூலை9

சாதாரண மோட்டார் சைக்கிள்களை மொபெட் சைக்கிள்கள் எனக் காட்டிக்கொண்டு பாவனை செய்பவர்கள் ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து தண்டிக்கப்படுவார்கள் என்று பொலீஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுபற்றிப் போக்குவரத்திற்கு பொறுப்பான பிரதி பொலீஸ்மா அதிபர் தயா ஜயசுந்தர சகல பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார். மொபெட் சைக்கிள்கள் 50 கன சென்ரிமீற்றர் கனவளவுடைய என்ஜின்களைக் கொண்டவை. இவற்றிக்கு பெடல்களும் உண்டு. பெடல்களை உதைத்து இவற்றை ஓட்டமுடியும்.

இப்படியான என்ஜினுடன் கூடிய பெடல்கள் பூட்டப்படாத சைக்கிள்கள் எல்லாம் மொபெட் வகையைச் சார்ந்தவையல்ல. இவை மோட்டார் சைக்கிள்களாகும். இவற்றிக்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்படும் பதிவுப் பத்திரங்களுடன், காப்புறுதிப் பத்திரம், இயக்கத் தகடுகள், இறைவரி லைசென்ஸ் என்பன தேவை. இதனை ஓட்டுபவரும், இதில் பயணம் செய்யும் வேறும் எவரேனும் 'ஹெல்மட்' அணிதல் வேண்டும்.

தற்பொழுது 'மொபெட்' என்று காட்டிக்கொண்டு பலர் மோட்டார் சைக்கிள்களை ஓட்டிச் சட்டத்திற்கு முரணாக அனுகூலமடைகின்றனர்.

- இவ்வாறு தெரிவித்திருக்கும் பிரதிப் பொலீஸ்மா அதிபர், ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் சகல மோட்டார் சைக்கிள்களும் முறைப்படி பதிவுசெய்யப்பட்டவையாக இருத்தலை உறுதிசெய்யுமாறு பொலீஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் (ம)

# சிங்கள கிராமவாசி விடுவிப்பு

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றிப் புகுந்த சமயம் கைதுசெய்யப்பட்ட சிங்களக் கிராமவாசி ஒருவர் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டார். அவர் கண்காணிப்புக் குழு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

தமது இயக்கத்தில் இணைய வந்த பத்துவயதுச் சிறுவர்கள் இருவரையும் விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல் துறையினர் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

யுனிசெவ் அமைப்பின் அதிகாரிகள் முன்பாக இந்த கையளிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

குச்சுப்பிட்டியப் பகுதிக்குள் நுழைந்த சமயம் கைதுசெய்யப்பட்ட சிங்களக் கிராமவாசியான அபேயரத்ன சிங்க ஆரியரத்ன என்பவரே புலிகளால் விடுவிக்கப்பட்டவராவார். குச்சுப்பிட்டியப் பகுதி அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.சிவகுமார் அவரை கண்காணிப்புக் குழு அதிகாரிகளிடம் கையளித்தார். (ம)

## பிரமுக வங்கி விவகாரம்:

# 'அப்பீல்' நீதிமன்றின் உத்தரவுக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை

கொழும்பு,ஜூலை9

பிரமுக வங்கியை மீண்டும் திறக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இடைநிறுத்தியுள்ளது.

பிரமுக வங்கியின் செயற்பாடுகளை மத்திய வங்கி இடைநிறுத்தி, வங்கிக்கு சீல் வைத்து மூடியதைத் தொடர்ந்து வங்கியில் பணம் வைப்பிட்டோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மனுவை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, வங்கியை மூடியது சட்ட விரோதமான செயல் என்றும் வங்கியை மீண்டும் திறக்கும்படியும் கடந்த 2 ஆம் திகதி உத்தரவிட்டார்.

இந்தத் தீர்ப்பினை எதிர்த்து மத்திய வங்கி தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஜே.ஏ.என்.டி சில்வா, டி.பி.வீரசூரிய ஆகியோர் விசாரணை செய்தனர்.

விசாரணையின் பின் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பினை 14 நாள்களுக்கு இடைநிறுத்தி வைக்கும்படி அவர்கள் உத்தரவிட்டனர்.

14 நாள்களுக்குள் வங்கி நடவடிக்கைகளை மீண்டும் செயற்படவைக்க ஆதாரங்கள் கொண்ட அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் மத்திய வங்கிக்கு உத்தரவிட்டுள்ளது. (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

10C அவெனியூ, கொள்ளுப்பிட்டி என்னும் முகவரியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை நடராஜா இராமச்சந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (421682240V) 05.07.2003 அன்று யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 393/17, கோவில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். **T.P.:** 0777 - 719372. (19997)

தவசிகுளம், கொடிகாமம் என்னும் முகவரியைச் சேர்ந்த லோகேஸ்வரன் யோகதீஸ்வரி என்பவரது விசேட அடையாள அட்டை, யாழ். போதனா வைத்தியசாலை சிகிச்சை அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய "போ்ஸ்" 02.07.2003 அன்று சண்டிலிப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மினிபஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மா.சிவபாதம், பழம் றோட், ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(19967)

மீசாலை வடக்கு, மீசாலையைச் சேர்ந்த உமா தம்பிஐயா அவர்களின் தேசிய அடையாள அட்டை (இல. 775083395V) மற்றும் பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன யாழ். நகரப் பகுதிக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.23, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும் (தகுந்த சன்மானம் வழங்கப்படும்). (19991)

## விற்பனைக்கு

மானிப்பாய், கட்டுடையில் "பீல்ட் வியூ" (FIELD VIEW) எனும் நவீன வசதி கொண்ட வீட்டுடன் கூடிய 13 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- க.நகுலேஸ்வரன், "பீல்ட் வியூ",கட்டுடை. (19853)

ஆனைக்கோட்டை, வண்.வடமேற்கு, உயரப்புலம் பாடசாலைக்கு அருகாக, கிழக்குப் பக்கமாக நான்கு அறைகள் கொண்டதும், கார் தரிப்பிடம் கொண்டதும், சுற்று மதில் உடையதுமான வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஐ.மகேந்திரன், ஊரெழு கிழக்கு, ஊரெழு. (20951)

## இறைச்சிக்கோழி

புறோயிலர் 1Kg 140/= சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு:- 1) மான்ஸ் பாடசாலை வீதி, டச் றோட், உடுவில். 2) மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (19998)

## ஆங்கிலக்கல்வி

மிகவும் இலகுவான முறையில் ஆங்கிலம் இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கலாம். உரும்பிராய்ப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு:- சி.சிந்தாமணி (டிஸ்பென்சறிக்கு அருகாக), பலாலி வீதி, உரும்பிராய். (19999)

## வகுப்புகள்

**Maths, English** நிச்சயமாக **(A, B, C)** பெறுபேறடையவும் தரம் 6-10 வரை (உட்பட) **Spoken English.** இதுவரை கணிதத்தில் சித்தியடையாதவர்களுக்கும் விசேடமாகக் கற்பிக்கப்படும். தொடர்பு: 85, சிவன் கோவிலடி (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (19766)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை9

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு முன்பள்ளிக் குழந்தைகளின் கைவினைப் பொருள் கண்காட்சி ஒன்றினை ஒழுங்குசெய்துள்ளது.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 56 முன்பள்ளிகளின் சிறுவர்களினால் வடிவமைக்கப்பட்ட பொருள்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை இக்கண்காட்சி இடம்பெறும். (ம-185)

## மாணவர் வளர்ச்சி நிதிக்கான இசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை9

அங்கவீனமடைந்த மாணவர்களின் வளர்ச்சி நிதிக்காக யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்படும் 'நெஞ்சோடு பேசும் நிலா இசை' எனும் இசை நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-10-ரி)

---

## யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் பரிசளிப்பு விழா - 2003

காலம்: இன்று (09-07-2003) புதன்கிழமை முற்பகல்10.00 மணி
இடம்: வித்தியாலய மண்டபம்
தலைவர்: செல்வி பா.மார்க்கண்டு (அதிபர்)
பிரதம விருந்தினர்: திரு.பரமநாதர் விக்னேஸ்வரன் (கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)
நிறுவுநர் நினைவுரை: லயன் செல்லப்பா நடராசா (நாடாளுமன்ற முன்னாள் சிரேஷ்ட ஹன்சாட் அறிக்கையாளர்)
கௌரவ விருந்தினர்கள்: கலாபூஷணம் திரு.வை.க.சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திரு.க.கனகசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
ஆசியுரை: சிவஸ்ரீ ச.சிறீஸ்கந்தராசா குருக்கள்
பரிசில் வழங்கல்: திருமதி தவமணி விக்னேஸ்வரன்

அதிபர்,ஆசிரியர், மாணவர்கள்.
கோண்டாவில். பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
(20003)(19-24-17-15)

---

## கங்கைவேணியனே உன் பணி சிறக்கட்டும்



இறைவனின் அருட் கருணையினால் நல்ல இதயம் படைத்த புண்ணிய சீலரான

### திரு.கு.கங்கைவேணியன்

அவர்கள் 30.06.2003இல் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டமையையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். தானத்தில் சிறந்தது அன்னதானம். இவரோ நிதானமாகச் செயற்படும் ஆற்றல் மிக்கவர் என்பதனால் ஆண்டவனே இவருக்கு அரிய பல சேவைக்கு அருட் கருணையை அள்ளி வழங்கியிருக்கின்றார்.

இவரிடமிருந்து பொருளைத்தான் திருடமுடிந்ததே தவிர கயவர்களால் நல்ல இதயத்தைத் திருட முடியவில்லை. உண்மையான நம்பிக்கையோடு கைதொழும் இவரைத் தும்பிக்கையான் கைவிடவில்லை. பொருள் திரும்பவும் கிடைத்துவிட்டது. தூய உள்ளன்போடு சேவையாற்றும் இவருக்கு இப்பதவி மிகவும் பொருத்தமானதே. பசுவதையை அடியோடு வெறுத்து எல்லா உயிர்களையும் சமமாக நேசிக்கும் இவரைப் பாராட்டி வாழ்த்துவதில் நாமும் பெருமிதம் அடைகின்றோம்.

✦ சேவையின் இருப்பிடமான இவரின் தேவையை அறிந்தே இறைவன் வள்ளல் தன்மையை இவருக்கு அளித்துள்ளான். அவரது அளப்பரிய சேவை அபரிமிதமாக வளர்ச்சியுற்றுத் திகழ கலியுகவரதனாம் கதிர்காம முருகன் அவருக்குக் கருணைத் திறனை அள்ளி வழங்க வேண்டிப் பிரார்த்தித்து வணங்கிப் போற்றுகின்றோம்.

*கைதடி.* சி.கனகரத்தினம்
(20004) (25-24-17-15) கதிர்வேலவன் அரிசி ஆலை, கதிர்வேலவன் களஞ்சியம்

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### கந்தன் தியாகராசா

தோற்றம் 1948-12-23 — மறைவு 2003-06-09

**திதி: 09-07-2003**

இன்று (09-07-2003) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வீரபத்திரர் கோயில்,*
*நாவற்குழி, கைதடி.* (19969) (26-24-15-17) **மனைவி, பிள்ளைகள்.**

---

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பூவுலகில் 24 - 12 - 1954



புகழுலகில் 09 - 06 - 2003

### அமரா சின்னத்துரை சுந்தரலிங்கம்

*(ஊழியர், நீர்வளசபை, வடபிராந்தியம், யாழ்ப்பாணம்)*

அன்பும் பாசமும் தந்து
எங்களுக்கு நல்வழி காட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபத் தொடர்புகொண்டவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (09. 07. 2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இதை சகலரும் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணன் ஒழுங்கை,*
*இராஜ வீதி,*
*கோப்பாய்.* (19975) (26-24-15-17) - **குடும்பத்தினர்.**

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். செயலகத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றும்


### செல்வி ஆனந்தி ஜெயரட்ணம் B.A.

அவர்கள் அகில இலங்கை சைவப் புலவர் பரீட்சையில் பிரிவு IIஇல் சித்திபெற்றதையிட்டு, அவரைப் பாராட்டுவதுடன், அவர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: **நண்பிகள்.**
(20010) (24-15-17)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அளவெட்டியின் மைந்தன்

### செல்லையா சிவலோகநாதன் (G.S.)

அவர்கள் 25-06-2003 அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் சமாதான நீதிவானாக பதவியேற்றதையிட்டு நாம் மனம் நிறைந்த மகிழ்வடைகின்றோம்.

மனமாரப் பாராட்டும்:
Dr.தியாகராஜா ஆறுமுகம்,
பா.செல்வநாதன்.

ஆறுமுகம் வைத்திய நிலையம்:
அளவெட்டி தெற்கு. (20009) (24-15-17)

---

உ

## உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

*அன்புடையீர்!*

சுவஸ்தி ஸ்ரீ மங்களகரமான சுபானு வருஷம் ஆனித்திங்கள் 26ஆம் நாள் (10-07-2003) வியாழக்கிழமை அனுஷநட்சத்திரமும் சித்தயோகமும் துவாதசி திதியும் கூடிய சுபநன்னாளில் காலை 9.29மணி முதல் 10.59மணி வரையிலான சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

**புவன சதாசிவக் குருக்களின் பௌத்திரனும்** (திருநெல்வேலி காயாரோகண தேவஸ்தானம்)

**நாகேந்திர சண்முகரெட்ணக் குருக்களின் தௌஹித்திரனும்** (திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் தேவஸ்தானம்)

எமது கனிஷ்ட புத்திரனுமாகிய சிரஞ்சீவி

### விக்கினகரசர்மாவுக்கு

சௌள, யக்ஞோபவீததாரண பிரம்மோபதேசம் செய்து வைப்பதற்கு எல்லாம்வல்ல விநாயகப் பெருமானினதும் நீலாயதாட்சி சமேத காயாரோகணப் பெருமானினதும் துணைகொண்டு நிச்சயிக்கப்பெற்று, மேற்படி முகூர்த்தம் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்பசமேதராக வருகைதந்து குமாரனை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*'பாக்கியலட்சுமி வாசம்'*
*இலங்கைநாயகி அம்மன் கோயிலடி,*
*பருத்தித்துறை வீதி,*
*கல்வியங்காடு.*
*(சி-28826) (26-24-15-17)*

தங்கள் நல்வரவை நாடும்:
**சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள்,**
**புவனேந்திரசர்மா (ரவிஐயா)**
**ஜெயராணி தம்பதிகள்.**

---

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான

### கேள்விகோரல்

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்துக்கு 1500 மெற்றிக்தொன் பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| மாதாந்த கேள்வித் தொகை | | |
|---|---|---|
| 2003 ஜூலை | 2003 ஒகஸ்ட் | 2003 செப்ரெம்பர் |
| 1500 MT | 1500 MT | 1500 MT |

கேள்விகளைச் சமர்ப்பிக்கவிரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2003.07.09ஆம் திகதி தொடக்கம் 2003.07.23ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேளவி வைப்பாக (விலை கேள் முறி Bid Bond) மெற்றிக்தொன் ஒன்றிற்கு (01 Mt.) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல்வேண்டும் (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).
3. பூரணப்படுத்திய இரு கேளவிப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2003.07.24 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேளவிகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.
4. நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.
5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFOR MANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

**செ.பத்மநாதன்,**
தலைவர் / அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை / மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
2003.07.07 (சி-28816) (25-24-15-17)

# நாவலடி படைமுகாம் விஸ்தரிப்பு! பாதுகாப்பு வேலிகளும் புதுப்பிப்பு!!

மட்டக்களப்பு,ஜூலை9

வாழைச்சேனைக்கு அருகிலுள்ள நாவலடிச் சந்தியில் அமைந்துள்ள படைமுகாம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த முகாமின் எல்லை மேலும் சுமார் ஐம்பது மீற்றருக்கு அப்பால் விரிவாக்கப்பட்டு புல்டோசர்கள் கொண்டு மண் அணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், பாதுகாப்பு வேலிகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. காவலரண்கள், பதுங்குகுழிகள் என்பனவும் புதிதாக அமைக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு, கொழும்பு வீதியில் உள்ள படை முகாம்கள் மற்றும் பொலீஸ் நிலையங்களுக்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டன.

எனினும், நாவலடிச் சந்தி தொடக்கம் மின்னேரி வரையுமுள்ள படைமுகாம்களுக்கு ஊடாகச் செல்லும் பிரதான வீதிகள் இதுவரை திறந்துவிடப்படவில்லை. பொதுமக்கள் உள்வீதி ஊடாகவே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

மட்டக்களப்பு நகருக்கு வடக்காக மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் சுமார் 35 கிலோ மீற்றரில் திருமலை வீதி (வாகரை வீதி) பிரியும் இடத்தில் நாவலடிச்சந்தி உள்ளது. இப்படைமுகாம் கடந்த 1990ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

23ஆவது டிவிசன் அமைந்துள்ள மின்னேரிக்கும் 23-2 ஆவது படைப் பிரிவுக்கு உட்பட்ட வாழைச்சேனை மற்றும் வாகரைப் பிரதேசத்திலுள்ள படைமுகாம்களுக்கும் 23 - 3 ஆவது படைப்பிரிவுக்கு உட்பட்ட மட்டக்களப்புப் பிரதேச படை முகாம்களுக்கும் இக்கொழும்பு வீதி பிரதான விநியோகப் பாதையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கல்முனை ஆதார வைத்தியசாலை தொலைபேசி இணைப்பு துண்டிப்பு!

## கட்டணம் செலுத்தியும் பலன் கிடைக்கவில்லை

காரைதீவு,ஜூலை9

100 வருடங்களுக்குமேல் பழைமை வாய்ந்த கல்முனை ஆதார வைத்தியசாலையில் ஒரு தொலைபேசி வசதிகூட இல்லை.

அதிர்ச்சி தரும் இச்செய்தி குறித்து கல்முனை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஆர்.சசீந்திரனிடம் வினவியபோது அது உறுதிப்படுத்தப்பட்டது.

"தொலைபேசிச் சேவை தற்போது எமது ஆதார வைத்தியசாலையில் இல்லை என்பது உண்மை. கடந்த ஒருமாத காலமாக இத்துர்ப்பாக்கிய நிலை நிலவுகிறது.

"எமக்கு 2லட்சத்து 74 ஆயிரம் ரூபா தொலைபேசி கட்டண நிலுவை வந்தது. நாம் எமது ஊழியர்களின் ஆதரவுடன் அதனைச் செலுத்தினோம். ஆனால், சுகாதாரப் பணிமனை இன்னும் உரிய இடத்தில் அதனைச் செலுத்தாத காரணத்தினால் எமது தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் சொல்லொண்ணாத் துயரங்களுக்கு முகம்கொடுத்து வருகிறோம்" எனவும் அவர் சொன்னார்.

ஆபத்தான வேளைகளில் அம்புலன்ஸ் பெறக்கூட முடியாத துர்ப்பாக்கிய நிலை இங்கு நிலவுகிறது.

# தமிழ்க் குழுக்களின் அலுவலகங்களுக்கு மட்டக்களப்பில் பாதுகாப்பு அதிகரிப்பு!

மட்டக்களப்பு,ஜூலை9

மட்டக்களப்பு நகரில் மாற்றுத் தமிழ்க் குழுக்களின் அலுவலகங்கள் அமைந்துள்ள வீதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பி. அலுவலகம் அமைந்துள்ள பண்டிங்ஸ் ஒழுங்கை, ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி அலுவலகம், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் என்பன அமைந்துள்ள முதலாவது லேக் வீதி, புளொட் அலுவலகம் அமைந்துள்ள வைத்தியசாலை வீதி என்பவற்றிலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாற்றுத் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களை அநாவசியமாக வெளியே நடமாட வேண்டாமென்றும் பொலீஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். அவசியமான விடயங்களுக்காக வெளியே செல்லவேண்டியிருப்பின் பொலீஸ் பாதுகாப்பைப் பெற்றுச் செல்லுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. பிரதி அமைப்பாளர் பரணிதரன் பிரதீபன் மட்டுமே மாவட்டத்தில் தங்கியுள்ளாரென்றும் ஏனைய மாற்றுத் தமிழ்க்குழுக்களின் மாவட்ட அமைப்பாளர்கள் கொழும்பு சென்றிருப்பதாகவும் தெரியவருகிறது. (ம)

### அவசியமற்றதெனக் கருதியதால்

# நம்பிக்கைப் பிரேரணையை பொருட்படுத்தவில்லையாம்!

### இப்படிக் கூறுகிறார் சங்கரி

யாழ்ப்பாணம்,ஜூலை9

என் மீதான நம்பிக்கைத் தீர்மானத்தை, அவசியமற்றது எனக் கருதியதால் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்திருந்த நானே அதனை விவாதத்துக்கு எடுக்கவில்லை.

- இப்படிக் கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி.

வெளிநாட்டு செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார். அப்பேட்டியில் ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்ததாவது:-



கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் கருத்து வேறுபாடுகள் எதுவும் இருக்கவில்லை. சில பத்திரிகைகள், விஷமத்தனமான செய்திகளைப் பிரசுரித்திருந்தன. ஞாயிற்றுக்கிழமை, நிறைவேற்றுக் குழுக்கூட்டத்திலே என்னைப் பதவி விலக்கப்போவதாகவும் சிலர் கூறியிருந்தனர். ஆனால், இந்த விவகாரத்தை நிச்சயமாக அந்த நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலுக்குள் எடுத்திருக்க முடியாது. அப்படியே எடுத்திருந்தாலும் அது படுதோல்வியிலேயே முடிந்திருக்கும். அதனை நிகழ்ச்சி நிரலுக்குள் எடுக்கவேண்டும் என்று நினைத்தவர்கள், சபையில் எனக்கிருந்த ஆதரவை கண்டு அதனை தற்காலிகமாக நிறுத்திவிட்டார்களோ அல்லது நிரந்தரமாகக் கைவிட்டார்களோ தெரியவில்லை.

நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில், கூட்டணித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக பல பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. அச்செய்திகளில் உண்மை எதுவும் இருக்கவில்லை. ஆகவே, கூட்டணித் தலைவர் மீதான நம்பிக்கைத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவோம் எனக் கட்சிப் பிரமுகர் ஒருவர் ஆலோசனை வழங்கினார். அந்த நிறைவேற்றுக் குழுக்கூட்டத்துக்கு கூட்டணித் தலைவராகிய நானே தலைமை வகித்துக்கொண்டிருந்தேன். கூட்டணித் தலைவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை எதுவும் இல்லாதபோது, நம்பிக்கைத் தீர்மானம் அவசியமற்றது என நாங்கள் கருதினோம். எனவே, அதனைப் பொருட்படுத்தாது விவாதத்துக்கும் எடுக்கவில்லை - இப்படி ஆனந்தசங்கரி கூறினார். (ம-9)

# தன்வாழ்நாள் முழுமையையும் இலக்கியத்துக்கு அர்ப்பணித்தவர்!

## பண்டிதமணி பற்றி பண்டிதை பொன். பாக்கியம் உரை

யாழ்ப்பாணம்,ஜூலை9

தமிழ் இலக்கியத்திற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.

- இவ்வாறு தெரிவித்தார் பண்டிதை பொன். பாக்கியம்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 104ஆவது பிறந்ததின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இலக்கியத்தில் பெரும் புலமை கொண்ட பண்டிதமணி அவர்களின் பேச்சுக்கள் யாவும் இலக்கியநயம் மிக்கதாகவே இருக்கும். பண்டிதமணி என்னும் பட்டம் அவருக்கு மிகவும் பொருத்தமானது.

அந்தக் காலத்தில் நாம் மாணவர்களாக இருந்தபொழுது பண்டிதமணியின் பேச்சுக்கள் எங்கு நடைபெற்றாலும் தவறாது சென்று அந்தப் பேச்சைக் கேட்போம். அதிக நேரம் அவர் மேடைகளில் பேசினாலும் கூட அவரது பேச்சு மிகவும் சிறப்பாக இருக்கும்.

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் நடந்ததொரு நிகழ்வில் சுமார் மூன்று மணிநேரம் பண்டிதமணி ஐயா உரையாற்றினார். இது அவரது பேச்சுத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு - என்றார்.

மயிலங்கூடலூர் பி.நடராஜன் தனதுரையில் தெரிவித்ததாவது:-

பண்டிதமணி ஐயா கண்ணகி தோத்திரம் தொடக்கம் கம்பராமாயணம் வரையான 24நூல்களை எழுதியுள்ளார். இந்த நூல்கள் யாவும் சைவ சமய மரபினை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளன. அத்துடன் பல இலக்கியக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார் என்றார். (ம-10-6)



விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரால் குடாநாடு முழுவதும் நிகழ்த்தப்பட்டு வருகின்ற 'கனவுகள்' என்னும் தெரு நாடகத்தில் ஒரு காட்சியினைப் படத்தில் காணலாம்.

*(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)*

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறை 3ஆம் அணி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு உடற்கல்வித்துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் அனைவரையும் வருகை தருமாறு உடற்கல்வித்துறை மாணவர் மன்றத் தலைவர் கேட்டுள்ளார். (ம-6)

## 'சார்ஸ்' நோய் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ். விஞ்ஞானச் சங்கத்தின் அனுசரணையுடன் 'சார்ஸ்' நோய் தொடர்பான கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவ வருகை விரிவுரையாளர் டாக்டர் எஸ்.சிவராஜா கருத்துரை வழங்கவுள்ளார்.

இதில் பொதுமக்களையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# அரச ஊழியர் அனைவருக்கும் நவம்பரில் சம்பள உயர்வு

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு,ஜூலை9

அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் நவம்பர் மாதம் முதல் சம்பள உயர்வு கிடைக்கும். நிதி அமைச்சின் சிபார்சுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது முதல் ஒரு வருட காலத்திற்கு புதிய நியமனங்களோ, சம்பள உயர்வோ வழங்கப்படமாட்டாது என வெளிப்படையாகவே அறிவித்திருந்தது.

இதன் அடிப்படையில், அடுத்து வரும் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையிலேயே நிதியமைச்சர் சம்பள உயர்வுக்காக ஆலோசனைகளை முன்வைத்துள்ளார். நிதி அமைச்சரின் சிபார்சுக்கமைய சகல மட்டத்திலிருந்து வழங்கப்படும் சம்பளத் திட்டம் தொடர்பான அறிக்கை திறைசேரியினால் அடுத்த மாதம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படும். (ம)

### கிளிநொச்சியின் பல இடங்களில்

# 9ஏக்கர் பரப்பில் அன்னாசி செய்கை

கிளிநொச்சி,ஜூலை9

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பெருமளவு நிலப்பரப்பில் அன்னாசிச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 9ஏக்கர் நிலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் திருவையாறு, கனகாம்பிகைக்குளம், வட்டக்கச்சி, கனகபுரம், முழங்காவில் ஆகிய இடங்களிலேயே அதிக அளவில் செய்கை பண்ணப்படுகிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துக்குச் சொந்தமான வட்டக்கச்சிப் பண்ணையிலும் அதிக அளவில் இது செய்கை பண்ணப்பட்டுள்ளது.

"கிளிநொச்சி மாவட்டமானது உலர்வலயப் பிரதேசமாக உள்ளமையால் தென்பகுதியின் ஈரப்பிரதேச அன்னாசிப் பழங்களை விட இவை நல்ல சுவையுடையனவாக இருக்கின்றன" என்று கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்டத்திலும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த அன்னாசிப் பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10-78)

# அமைச்சர் ரவி கருணாநாயக்க வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு!

வர்த்தகத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் வீட்டின்மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலினால் அங்கு காவல் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தர் காயத்துக்குள்ளானதாகவும் அவர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அமைச்சரின் வீடு நடாளுமன்ற கட்டடத்திற்கு அருகில் பலத்த பாதுகாப்புடன் இருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதல் நடந்த சமயம் அமைச்சர் நாட்டில் இருக்கவில்லை எனவும் பொலீஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடத்திய இரு சந்தேக நபர்களும் ஜீப் ஒன்றில் வந்தே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக பொலீஸார் கூறுகின்றனர். அவர்களில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## செய்முறைப் பரீட்சை

இவ்வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் சங்கீதம், நடனம் மற்றும் மனைப்பொருளியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் இம்மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி பாடங்களுக்கு தோற்றித் தகுதிபெற்ற பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம-30)

## வடமராட்சியில் முதன்முறையாக மகளிருக்கான 3 நாள்

# அழகுக் கலைப் பயிற்சி

1. அழகுக் கலை பற்றிய ஆய்வு சருமப் பராமரிப்பு (கரும்புள்ளி, கருவளையம், பருக்கள், தோற்சுருக்கம் அகற்றுதலுக்கான சிகிச்சை, வழிமுறைகள்)
2. Facial (பேசியல்)
   Fruit Facial, Flower Facial Cream Facial
   முகத்திற்குரிய மசாஜ் முறைகள்
3. BRIDAL MAKE - UP
   மணப்பெண் அலங்கரிப்பும் ஐபிறோ ஷேப்பிங்

இடம் : தூரிகை - கேட்போர் கூடம்- நெல்லியடி
காலம்: 2003 ஜூலை 12, 13, 14 சனி, ஞாயிறு, திங்கள
காலை 10 மணி- 2 மணி வரை.

இந்தியன் இன்ஸ்ரியூட் பியூட்டி தெரபி, சென்னை, இந்தியா நிறுவனத்தில் பயிற்சி பெற்ற
அழகுக் கலை நிபுணர் செல்வி மதிவேணி அவர்கள் பயிற்சி வழங்குவார்.

★ [illegible]

மேலதிக விவரங்களுக்கு:
தூரிகை நுண்கலை வளாகம்
ம.ம.வி. வீதி, நெல்லியடி.

(C-28831) (30-13-18-32)



தொண்டைமானாறு வெளிக்கள நிலைய

## அலுவலகத் திறப்பு விழா

FWC

இடம்: யாழ். வலயக் கல்விப்பணிமனை
காலம்: 2003-07-10 பிற்பகல் 4.00 மணி
தலைவர்: திரு .கே. எஸ்.குகதாசன் M.Sc.
-நிலையத் தலைவர்-

அலுவலகத்தைத் திறந்து வைப்பவர்!
**திரு. ப.விக்னேஸ்வரன்**
*(யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும், நிலையக் காப்பாளரும்)*

*நிலைய உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

கே.எஸ்.குகதாசன் தலைவர். — பொ.சிவானந்தராஜா செயலாளர்.
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்.
(C28840) (30-13-18-32)


## யாழ்.பல்கலைக்கழக கல்வி டிப்ளோமா பகுதிநேர முதலாம் வருட மாணவர்களுக்கு..!

முக்கிய கலந்துரையாடல் ஒன்று 11.07.2003 வெள்ளிக்கிழமை நடைபெறவிருப்பதால் மாணவர்கள் அனைவரும் பி.ப. 3.00 மணிக்கு பல்கலைக்கழகத்துக்கு சமுகந்தரவும்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா
மாணவ பிரதிநிதி

(20017)(30-13-18)

## அறிவித்தல்

எதிர்வரும் 10.07.2003 தொடக்கம் யாழ்.மாவட்ட. சிற்றூர்தி சேவை சங்கங்களின் தலைமைச் செயலகம் 50/1 பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கையில் செயற்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.

வெளிமாவட்டங்களுக்கு சுற்றுலா செல்ல உள்ளோரும், விசேடவாடகைக்கு சிற்றூர்திகள் தேவைப்படுவோரும் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொலைபேசி இல: 071-2380512
பொ.கெங்காதரன்
தலைவர்.

(20021) (30-18-13-32)

## TEACHING HOSPITAL, JAFFNA
## RENOVATION OF C.E.C.B. ENGINEER'S OFFICE

Chairman, Divisional Tender Board, Teaching Hos pital, Jaffna will receive sealed tenders for Renovation C.E.C.B. Engineer's Office and will be closed at10.00 a.m. on 23-07-2003 .

1. Tenders should be submitted on the forms available from Director, Teaching Hospital, Jaffna obtainable upto 16.07.2003 on payment of a non-refundable fee of Rs. 250/=

2. Tenders will be opened immediately after the closing at the Office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

3. Tender Forms will be issued only to contractors having valid registration in Grade M7 and above in the field of Building Construction under the Institute of Construction Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors' Association of Sri Lanka (NCCASL).

4. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box kept at the address appearing below, to receive before the closing time.

5. Tender Documents may be inspected free of charge at the Resident Engineer's Office, C.E.C.B., Teaching Hospital, Jaffna.

6. For further details, please contact A.O. G.H.Jaffna.

Dr.S.Sathurmugam.
Chairman,
Divisional Tender Board,
Teaching Hospital,Jaffna.

(சி-28832)(30-13)

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை யோகராசா

(கார் உரிமையாளர் - CL 9154)

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை யோகராசா நேற்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு,திருமதி அப்புத்துரையின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு,திருமதி சின்னத்தம்பி - அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும் அம்பிகாதேவி (பாமா-நோர்வே), சிவகுமார் (CTB), சந்திரகுமார், சந்திரகாந்தி ஆகியோரின் தகப்பனாரும் சிதம்பரநாதன், நேசலட்சுமி, கெங்காதரன், இந்திராணி ஆகியோரின் மாமனாரும் புவனேஸ்வரி இரத்திரசிங்கம் (அவுஸ்திரேலியா) அவர்களின் அருமைச் சகோதரனும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன், சுகிர்தா, சரோஜாதேவி, சாந்தா, கீதா, ஜெயகாந்தன், பாலகாந்தன், ஞானகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுசீந்திரன், சசீலா, (நோர்வே), சோபனா (யா/பல்கலைக்கழகம், முகாமைத்துவம்), மயூரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), க்ஷேமதர்சினி, துயாளன், தர்சன், சதீஸ்குமார் (லண்டன்), தேவிகா, ராஜ்குமார் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோயில் வீதி, (நந்தாவில் அம்மன்வீதி),*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
சிவகுமார் (மகன்)
(CTB)

(20028) (30-18-13-29)

## கும்பாபிஷேகங்கள்

சண்டிலிப்பாய்,ஜூலை9

பண்டத்தரிப்பு காலையடி கௌரி அம்பாள் சமேத கேதீஸ்வரநாதர் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும், சண்டேஸ்வரபெருமானுக்கு பிரதிஷ்டா கும்பாபிஷேகமும் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறுமென்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஜ-135)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை9

சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடாலயப் புனருத்தாரண மஹாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை பகல் நடைபெறவுள்ளது. (10-28)

★ ★ ★

தென்மராட்சி,ஜூலை9

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புறுட்டையன் பிள்ளையார்) ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

மஹா கும்பாபிஷேக கிரியைகள் இன்று காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிப் பகல் 12.00 மணி தொடக்கம் எண்ணெய்க்காப்பு இடம்பெறும். (10-117)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை9

சுழிபுரம் பறாளாயம்பதி ஈஸ்வர விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-10-28)

## சங்காபிஷேகம்

மாதகல்,ஜூலை9

மாதகல் வடக்கு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய (பேச்சியம்மன்) சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறும். (எ-10-ரி)

## செயலமர்வு

தென்மராட்சி,ஜூலை9

தென்மராட்சி கல்வி வலய கணித பாட விசேட செயற்திட்டம் தொடர்பான செயலமர்வு இன்று புதன்கிழமை காலை 9.00மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

மாகாண கல்வித் திணைக்கள பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்ளும் இந்த செயலமர்வில் வலய கணித பாட இணைப்பாளர்கள் அல்லது செயற்திட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## முன்பள்ளித் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை9

பண்டத்தரிப்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய செபமாலை மாதா முன்பள்ளிக்கட்டடம் இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பிரதேசசபைச் செயலாளர் பி.விகடர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-185)

## தென்மராட்சி ஆசிரியர்களின் சம்பள நிலுவை

தென்மராட்சி,ஜூலை9

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் ஆசிரியர்களின் சம்பள நிலுவைக் கொடுப்பனவு நாளை தொடக்கம் 12 ஆம் திகதி சனிக்கிழமை வரை வலய அலுவலக நிதிக்கிளையயில் வழங்கப்படவுள்ளது.

ஆசிரியர்கள் இக்கொடுப்பனவை நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)


## விற்பனைக்கு

★CANON NP-1215 PHOTO COPIER
★ பனசொனிக் FAX:KX-FJ 71CX: வெள்ளை.
★ நிப்போன் AUTOMATIC VOLTAGE STABILIZER (3000W)

தொடர்பு:
இல.110, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(20030) (30-18-13-29)



SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது
be sharp
யாழ்ப்பாணத்தில்



உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up
BROWNS GROUP BG ESTD 1875
Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

# இதுவும் புதிது



அதிகரித்து வரும் மக்கள் தொகையைக் கட்டுப் படுத்த ஒவ்வொரு நாடும் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. குறிப்பாக சீனா, இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் புதிய புதிய கருத்தடை சாதனங்களை உருவாக்குவதில் தீவிரமாக ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தேவை இல்லாத கர்ப்பங்களைத் தடுக்கும் வகையில் பெண்களுக்கு என்று கருத்தடை மாத்திரைகள் உள்ளன. இருப்பினும் ஞாபக மறதி மற்றும் அவசரத்தில் மாத்திரைகளைப் பயன்படுத்த பல பெண்கள் தவறி விடுகின்றனர். இது போன்ற சிக்கல்களில் இருந்து பெண்களைப் பாதுகாக்க புதிய கருத்தடை சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உடலில் காயங்களுக்கு ஒட்டும் பிளாஸ்திரி போன்றது இது.

இந்த பிளாஸ்திரியில் கர்ப்பத்தை தடுக்கும் ஹோமோன் மருந்து சேர்க்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணின் உடலில் எந்த பகுதியில் வேண்டு மானாலும் இந்த கர்ப்பத்தடைப் பிளாஸ்திரியை ஒட்டிக்கொள்ளலாம். இதில் உள்ள ஹோமோன் தோல் வழியாக ரத்தத்தில் கலந்து கர்ப்பம் ஏற்படாமல் தடுக்கும்.

ஒரு பிளாஸ்திரியை ஒரு வார காலம் வரை அணியலாம். இதை அணிந்து குளிக்கலாம். தண்ணீரில் நீச்சல் அடிக்கலாம். எந்த பாதிப்பும் இதனால் ஏற்படுவதில்லை. ஒரு மாதத்தில் வாரம் ஒரு பிளாஸ்திரி விதம் 3 வாரம் மட்டும் தொடர்ந்து இதை அணிந்தால் போதும். (4ஆவது வாரம் பிளாஸ்திரி தேவையில்லை) ஏன் என்றால் 3 வாரங்களில் உடலில் சேரும் மருந்து 4ஆவது வாரம் வரை கர்ப்பத்தை தடுக்கும் சக்தி கொண்டதாக இருக்கும்.

அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டு பெண்களிடம் ஏகோபித்த வரவேற்பைப் பெற்ற இந்த பிளாஸ்திரி கர்ப்பத்தடை மருந்து தற்போது இங்கிலாந்திலும் அறிமுகமாகி இருக்கிறது.

ஏராளமான பெண்கள் இந்த கர்ப்பத்தடை மருந்தை ஆர்வத்துடன் வாங்கி பயன்படுத்துகின்றனர். விரைவில் இது மற்ற நாடுகளிலும் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பொலீஸாருக்கு...

சிங்கப்பூர் பொலீஸாருக்கு அவசர தேவைகளுக்கு பயன் படுத்திக்கொள்ள புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய சைக்கிள்களை வழங்கி இருக்கிறார்கள். பற்றரியால் இயங்கும் இந்த சைக்கிள் மணிக்கு அதிகபட்சம் 20கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும்.



பிரேக் கிடையாது. ஸ்டியரிங் வீல்கூட கிடையாது. விமான நிலையம், மைதானம் போன்றவற்றில் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அமெரிக்காவின் தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த சைக்கிளை ஓட்ட பயிற்சி அவசியம்.

# கமரா டயரி



கமரா பொருத்தப்பட்ட டிஜிட்டல் டயரி. இதில் ஜப்பானிய மொழி எழுத்துக்கள் உடனடியாக மென்திரையில் வருவதற்கான மென்பொருளும் உள்ளது. விலை ரூ. 25ஆயிரம். ஜப்பானில் இன்று அறிமுகப் படுத்தப்படுகிறது.

# நாய்க்கு யோகம்



நியூயோர்க்கில் உள்ள மாடிஸன் ஸ்கொயர் பூங்காவில் நாய்க்கும் அதன் எஜமானர்களுக்கும் யோகா கற்றுத் தரப்படுகிறது. பயிற்சியின் இடையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் நாய் பெய்லி அதன் எஜமானியுடன்.

இங்கே நீங்கள் பார்ப்பது உலகின் விலையுயர்ந்த நெக்லஸ். ஜப்பானின் டயானா சன் டயமண்ட் நிறுவனத்தைச் சேர்ந்த அகி ஒகுரா வடிவமைத்துள்ள இந்த நெக்லஸின் விலை சுமார் 40 கோடி ரூபா. பார்த்தால் அப்படி ஒன்றும் விசேடமான நெக்லஸ்போன்று இல்லையே என்று எண்ணத் தோன்றுகின்றதா?

வெளியே பார்த்தால் அப்படித் தான் இருக்கும். ஆனால், உள்ளே ஒரு புகழ் பெற்ற வரலாறே இருக்கின்றது. என்னவென்கிறீர்களா?

உலகப் புகழ் பெற்ற ஓவியர் லியானாடோ டாவின்ஸி வரைந்த என்றும் அழியாப் புன்னகையை உதிர்க்கும் மோனலிஸா ஓவியத்தில் அவள் அணிந்துள்ள கவுனில் இருக்கும் லேஸின் வடிவில் இந்த நெக்கிலஸ் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இதன் மிகப் பெரிய விலைக்குக் காரணம்.



# முதல் மனிதர்

ஒருவர் ஒற்றையாய் ஓடியே உலகை சுற்றி சாதனை படைத்துள்ளார். அவர் பெயர் ரொபேர்ட் கார்சைட்; பிரிட்டிஷ்காரர். 6 வருடங்களாக 5 கண்டங்களில் 35 ஆயிரம் மைல்களை ஓடிக்கடந்துள்ளார். சரியாக 5 வருடங்கள் 8 மாதங்களுக்கு முன்பு டில்லியில் உள்ள இந்தியாவின் நுழைவு வாயிலில் (இந்தியாகேட்) தனது ஓட்டத்தைத் தொடங்கிய ரொபேர்ட் உலகை வட்டமடித்து, தொடங்கிய அதே இடத்திலேயே தனது ஓட்டத்தை நிறைவு செய்தார். (எல்லைப் பாதுகாப்பு காரணமாக வெறும் 20 மீற்றர் தூரத்தை மட்டும் விட்டுவைத்துள்ளார்.) ஓடிச் சுற்றிய முதல் மனிதன் என்ற பெருமையை ரொபேர்ட்



பெற்றார். கின்னஸிலும் இடம் பிடித்தார்.

22 மணி நேரம் தொடர்ந்து ஓடி தனது பயணத்தை நிறைவு செய்ததும் ரொபேர்ட் பேசிய முதல் வார்த்தை என்ன தெரியுமா? "நான் தூங்க வேண்டும்."

6 வருடங்களாக ஓடியதில் ரொபேர்ட் பயன்படுத்தி கழித்தது மொத்தம் 50 ஜோடி ஷூக்கள். "அப்புறம் நான் ஒன்றும் உலகின் சிறந்த ஓட்ட வீரர் இல்லை. ஆனால் எவ்வளவு தான் பிரச்சினைகள் வந்தாலும் அதை எல்லாம் சமாளித்து முன்னேறும் மன உறுதியும், பொறுமையும் படைத்தவன்" என்று தெரிவித்த ரொபேர்ட் அடுத்து பாரிஸ் செல்ல இருக்கிறார். ஏன் தெரியுமா? அங்குள்ள தனது காதலியை சந்தித்து திருமணம் செய்து கொள்ள கேட்கப்போகிறாராம். (ஓடி சாதனை படைத்த ரொபேர்ட்டும், "கல்யாணந் தான் கட்டிக்கிட்டு ஓடிப் போகலாமா...." என்று டூயட் பாடப் போகிறார்.)

# வாழ நினைத்தால்.....

இன்றைய இளைஞர்களிடம் சாதிக்கத் துடிக்கும் ஆர்வத்தைவிட தங்களது இயலாமையை வெளிப்படுத்தும் புலம்பல்கள்தான் அதிகமாகக் காணப்படுகின்றன.

நம்மைவிட மோசமான நிலையில் இருக்கும் பலர், நம்மைவிட வாய்ப்பு வசதிகள் இல்லாத பலர் வாழ்க்கையில் உயரவேண்டும் என்ற எண்ணத்துடன் துடிப்பாக செயல்பட்டு கடினமாக உழைத்து முன்னேற்றப் பாதையில் பீடுநடை போடுகின்றனர்.



வாழ நினைத்தால் வாழலாம்... என்ற பொன்மொழிக்கு ஏற்ப நடந்து கொள்பவர்தான் படத்தில் இருக்கும் அப்துல் ஜமால் சமது. ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இவர் 1989ஆம் ஆண்டு நடந்த நிலக்கண்ணிவெடி விபத்து ஒன்றில் சிக்கினார். இதில் அவரது இரண்டு கைகள் மற்றும் ஒரு கண் பார்வை பறிபோனது.

உடலில் ஏற்பட்ட ஊனம் அவரைப் பெரிதும் பாதித்தது. இருப்பினும் அதற்காக அவர் மனம் தளரவில்லை. "முயன்றால் முடியாதது எதுவுமில்லை" என்ற எண்ணத்துடன் தொடர்ந்து படிப்பில் ஈடுபட்டார்.

அமெரிக்காவில் கென்டகி பகுதியில் உள்ள தெல்மா நகரில் இருக்கும் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். தனது அயராத உழைப்பு, தீவிரமான படிப்பு மூலம் இன்று அவர் மாணவர் குழுவின் பேச்சாளராக இருக்கிறார். பல முக்கிய நிகழ்ச்சிகளில் அவர் ஆற்றும் உரை சக மாணவர்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டும் வகையில் அமைந்து வருகிறது.

# அட! அப்படியா!!

தயாரிப்பு கனிமொழி

# அமெரிக்காவின் அடுத்த யுகம்

இது தொழில்நுட்ப யுகம்.. இங்கு யார் தொழில்நுட்ப ஜாம்பவான்களோ அவர்கள் இந்த உலகின் தலைவர்கள். அதனால்தான் அமெரிக்கா உலகின் ஒரே வல்லரசாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இனிவரும் ஆண்டுகளில் உயர் தொழில்நுட்பத் திறனே உலக ஒழுங்கைத் தீமானிக்கும். இந்த தொழில்நுட்ப யுகத்தில் பின்தங்கும் எவரும் காணாமற்போக வேண்டி இருக்கும்.

தொழில்நுட்ப உலகில் முடிசூடா சக்கரவர்த்தியாகத் திகழும் அமெரிக்கா, உலகில் தன் தலைமைத்துவத்தை தொடர்ந்தும் நிலைநிறுத்துவதற்கு வசதியாக தன் தொழில்நுட்ப வலுவைப் பெருக்கிக்கொண்டே செல்கின்றது. அதிலும் அதன் போர்த் தொழில்நுட்ப ஆர்வம் மிக மிக அதிகம்.

பயங்கரவாதத்தை எதிர்த்து உலகில் அமெரிக்கர்களதும் ஏனைய மக்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதைத் தன் போர்முனைப்புத் திட்டங்களுக்கான நியாயமாக அமெரிக்கா முன்வைக்கின்றது.

அந்த வகையில் அமெரிக்காவின் சமீபத்திய திட்டம் உலகின் எந்த மூலையில் உள்ள இலக்கையும் அமெரிக்காவில் இருந்தே புறப்பட்டுச் செல்லும் விமானங்கள் மூலம் தாக்கியழிப்பது.

ஈராக் மீதான யுத்தத்திற்கு தான் ஏனைய நாடுகளின் தளங்களைப் பயன்படுத்துவதற்கு அவற்றின் அனுமதிக்காக காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டமையும், இந்த விடயத்தில் துருக்கி போன்ற நாடுகள் அதிகம் பிகு பண்ணிக் கொண்டதையும் அமெரிக்கர்கள் மிகச் சரியாகக் கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளனர்.

எனவே, இனிமேல் இவ்வாறு தனது போர் நடவடிக்கைகளுக்கு வேறு நாடுகளின் தளங்களை நம்பி இருக்காமல் அமெரிக்காவில் இருந்தவாறே செயற்படுத்தும் போர் முறைத் திட்டங்களில் அமெரிக்கா நாட்டம் செலுத்துகின்றது.

தற்போது உலகின் பல நாடுகளிலும் அமெரிக்கா பெரும் தளங்களை வைத்திருக்கின்றது. இவற்றைப் பேண பெருமளவு பணத்தையும் செலவிட வேண்டியுள்ளது.

இவற்றையெல்லாம் தவிர்த்து உலகின் எந்த இலக்கையும் அமெரிக்காவில் இருந்தே தாக்கியழிக்கும் திட்டங்களை முன்னெடுக்க அமெரிக்கா தயாராகி விட்டது.

**ஹைப்பர் சொனிக்**

உலகின் எந்த மூலையிலும் உள்ள இலக்கினை அமெரிக்காவில் இருந்து புறப்பட்டுச் சென்று 2 மணி நேரத்துக்குள் தாக்கியழித்து விட்டு திரும்பிவரக்கூடிய ஆளில்லாது இயங்கும் 'ஹைப்பர் சொனிக்' விமானத்தை உருவாக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

தற்போது ஒலியின் வேகத்தை



- பிரேம் -

மிஞ்சும் வேகத்தையுடைய 'சுப்பர் சொனிக்' விமானங்கள் பாவனையில் உள்ளன. அவற்றைவிட, வேகமான 'கொன்கோட்' விமானங்களும் பாவனையில் இருந்தன. இவை தற்போது பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளன.

இவை எல்லாவற்றையும் மிஞ்சும் மிகமிக வேகமான - ஒலியை விட பல மடங்கு வேகமான - விமானமாக 'ஹைப்பர் சொனிக்' விமானம் இருக்கும்.

இந்தத் திட்டம் "மீள்பாவனைக்குரிய ஹைப்பர் சொனிக் அதிவேக வாகனம்" (Reuseable Hypersonic CruiseVehicle - HCV). இதற்கான யோசனைகளை பாதுகாப்புக்கான மேலதிக ஆய்வுத் திட்ட அமைப்பு (Defence Advanced Research Projects Agency - DARPA - டர்பா) முன்வைத்துள்ளது. பல நிறுவனங்கள் இந்தத் திட்டத்தை விரைவில் செயற்படுத்துவதற்கு மிக ஆர்வமாக உள்ளன.

திட்டமிதுதான்! உத்தேச எச்.சி.வி. விமானம் சாதாரண விமானங்கள் பறக்கும் வான்வெளியை விட மாறுபட்ட வெளியில் 12 ஆயிரம் பவுண்ட் (5,500கிலோ) அளவுள்ள குண்டுகளைத் தாங்கியபடி உலகின் எந்தமூலையில் உள்ள இலக்கையாவது 2 மணி நேரத்துக்குள் தகர்த்து விட்டு திரும்புவது. அமெரிக்கா தளத்தில் இருந்தபடி கட்டுப்பாட்டாளர்கள் விமானத்தை இயக்கி, குறிப்பிட்ட இலக்கைத் தாக்கியழிப்பார்கள்.

2025ஆம் ஆண்டளவில் இந்த 'ஹைப்பர் சொனிக்' விமானத்தை பாவனைக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னேற்பாடாக ஆள் இல்லாமல் இயங்கும் விமானத்தில் அமெரிக்காவின் புகழ்பெற்ற குரூஸ் ஏவுகணைகள் மற்றும் வழிகாட்டல் குண்டுகள் (கணனியின் - வழிப்படுத்தல் - வழிகாட்டல் மூலம் இயங்கும் குண்டுகள்) எடுத்துச்சென்று விண்வெளியில் இருந்தபடி குறிப்பிட்ட இலக்குகளை இலக்கு வைத்து தாக்கி அழிக்கக்கூடிய தொழில்நுட்பம் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

இத்தகைய விமானங்கள் பொதுவான வான்வெளி வாகனங்கள் (Common Aero Vehicle - CAV) என்று அழைக்கப்படும். 2006 ஆம் ஆண்டளவில் இவை பயன்பாட்டுக்கு வந்துவிடும்.

தற்போதும் இத்தகைய மிகச் சிறிய விமானங்களை அமெரிக்கா

(12ஆம் பக்கம் பார்க்க)

# சென். பீற்றர்ஸ் தேவாலய தாக்குதலின் நினைவு நாள்

09.07.1995 இல் இடம்பெற்ற நவாலி தேவாலய தாக்குதல் நிகழ்வின் 8 ஆம் ஆண்டு நினைவுதினம் இன்று (09.07.2003) புதன்கிழமையாகும்.

வரலாற்றில் இந்த இரத்தக்கறை படிந்த நிகழ்வை மறக்கமுடியாது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசின் கீழ் இருந்த சிறீலங்கா விமானப்படையினர் இந்தக் கோரத் தாக்குதலை மேற்கொண்டனர்.

'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில தொடங்கிய இராணுவத்தினர், பலாலியில் இருந்தும் - அளவெட்டியில் இருந தும் மிகக் கொடூரமான முறையில் ஷெல் தாக்குதலை மேற்கொண்ட வண்ணம் இருந்தனர்.

திடீரென 09.07.1995 அன்று வலி. தென்மேற்கு, வலி.மேற்கு, வலி.தெற்குப் பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புகள் நோக்கி -

காலை 5.40 மணியில் இருந்து விமானத் தாக்குதலும் -

ஷெல் தாக்குதலும் தாறுமாறாக நடத்தப்பட்டன.

அன்றையதினம் காலை வலிகாமம் பகுதியில் உள்ள மக்கள், உடுத்த உடுப்புகளுடனும் கையில் எடுத்த பொருள்களுடனும் கண்ணீர் சிந்தியவாறு கால் நடையாகவும், சைக்கிள்களிலும் , மாட்டு வண்டிகளிலும் - வழுக்கையாறுவெளி, நவாலி - ஆனைக்கோட்டை பிரதான வீதி, கட்டுடை - மானிப்பாய் பிரதான வீதி வழியாகக் கைக்குழந்தைகள், சிறு குழந்தைகள், வயோதிபர்கள் எனச் சென்று கொண்டிருந்த வேளையிலும் -

சகல வீதிகளிலும் தாக்குதல் நடந்தது. வீதிக்கு வீதி சடலங்கள், காய மடைந்தவர்கள். இவர்களுக்கு உதவக்கூடியளவிற்கு வாகனவசதிகளோ, மருந்தகங்களோ, வைத்திய சாலைகளோ இல்லை.

**செல்வராஜா ரமேஷ்**

காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி இறந்த நிகழ்வுகளையும் மறக்க முடியாது.

அன்றைய தினம் குடாநாட்டின் பல்வேறு வீதிகளின் ஊடாக வந்த மக்கள் நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்திலும் -

நவாலி சின்னக் கதிர்காம முருகன் ஆலயத்திலும் தாகம் தீர்ப்பதற்காக அமர்ந்து களைப்பாறிய வேளையில் விமானம் மூலம் 13 குண்டுகள் தொடர்ச்சியாக இருஆலயங்கள் மீதும் வீசப் பட்டன.

நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயமும் -

நவாலி சின்னக்கதிர்காம முருகன ஆலயமும் அன்று மாலை 5.40 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் அதிர்ந்தன. இதில் 147 பேர் கையிழந்து, தலையிழந்து, கால் இழந்து, உடல் சிதறி, குற்றுயிராகக் கிடந்த நிகழ்வுகளையும் எம்மால் மறக்கமுடியாது.

350இற்கும் மேற்பட்டோர் காய மடைந்து சிகிச்சையளிக்காத நிலையில் பலர் உயிரிழந்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

இந்தக் கொடிய நிகழ்வின் ஞாபகார்த்த தினமான இன்று நவாலி சென்பீற்றர்ஸ் ஆலயத்திலும் - நவாலி சின்னக் கதிர்காம முருகன் ஆலயத்திலும் - விசேட வழிபாடுகள் நடத்தப் படவுள்ளன. இதேவேளை -

நவாலி புலவர் வீதியிலும், நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலய வீதியிலும் நவாலி படுகொலைச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## அமெரிக்காவின்.....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ளது. ஜோர்தானில் அல்கெய்டா தளபதி ஒருவர் மீது தாக்குதல் நடத்துவதற்கும் பின்னர் சிரிய எல்லையோரம், ஈராக் அதிபர் சதாம் சென்றதாகக் கருதப்பட்ட வாகனம் மீது தாக்குதல் நடத்துவதற்கும் இத்தகைய ஆளில்லாது இயங்கும் தாக்குதல் விமானங்களை அமெரிக்கா பயன்படுத்திப்பார்த்துள்ளது. அவற்றில் வெற்றியும் பெற்றுள்ளது.

இதன் அடுத்த கட்டமாக 2010 ஆம் ஆண்டளவில் சிறிய வடிவ விமானங்களை அதாவது ஆளில்லாது இயங்கும் சிறிய தாக்குதல் விமானங்களை (Small Launch Vehicle SLV) உருவாக்குவதற்கும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இவையும் வானத்தில் இருந்தபடி குண்டுகளை வீசி எதிரியின் இலக்குகளைக் கச்சிதமாகத தகர்க்க வல்லனவாக இருக்கும். 1000 பவுண்ட் (453 கிலோ) நிறையுடைய குண்டுகளைக் காவிச் சென்று தாக்குதல் நடத்தும் திறன் இந்த எஸ்.எல்.வி விமானங்களுக்கு இருக்கும். 3,000 மைல்கள் தூரத்தில் இருந்து குறிப்பிட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தும் திறனையும் இவை பெற்றிருக்கும்.

2007ஆம் ஆண்டில் இதன் பரீட்சார்த்த விமானத்தை இயக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த இரு ஆண்டுகளில் எஸ்.எல்.வி. விமானங்கள் பாவனைக்கு கொண்டுவரப்படும்.

**பயன்கள்**

அமெரிக்காவின் திட்டம் நிறைவேறி 'ஹைப்பர் சொனிக்' விமானங்களின் திறனை அமெரிக்கா பெற்று விட்டால் "அமெரிக்கா வேறு நாடுகளில் தனது தளங்களை அமைக்கத் தேவையில்லை. எதிரி நாடுகளிடம் இருந்தும் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களில் இருந்தும் அமெரிக்காவுக்கு விடுதலை கிடைத்து விடும்" - என்று டர்பா (Darpa) தெரிவித்துள்ளது.

"இதனுடைய மற்றைய நன்மை அமெரிக்கா தனது அதிகாரப் பரப்புக்குள் இருந்தபடியே தனது விமானங்களை இயக்கமுடியும். எந்தவிதமான எச்சரிக்கைகளையும் விடுக்காமலும் எந்த நாட்டு விமானத் தளங்களையும் கோராமலும் அமெரிக்கர்களால் இதனைச் சாதிக்கக் கூடியதாக இருக்கும்" - என்றும் டர்பா கூறுகின்றது.

ஆனால், அமெரிக்காவின் இந்தத் திட்டத்தை சுற்றுச் சூழலியலாளர்கள் கடுமையாகக் கண்டித்துள்ளது





**வலி.கிழக்கு பிரதேச சபை - நீர்வேலி**

**1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 49ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்**

வலி. கிழக்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடம், மதில், மலசலகூடம் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, மேற்படி கட்டட வேலைகளுக்கு பிரதேச சபையில் இருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பித்து சபையின் முன் அங்கீகாரம் பெறுதல்வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். முன் அனுமதி பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி. 04-07-2003.

க.வெங்கடாசலம்
செயலாளர்,
வலி.கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

(சி-28830) (19-14-17)

**D சேனாதிராஜா அன் சன்ஸ்**

★ கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்குமிடம்
★ செயற்கை பற்கள் கட்டுமிடம்
★ மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்யுமிடம

**எமது விசேட சலுகைகள்:**

- [illegible] 1000/=
- FULL SET (JAPAN TEETH) Rs.4000 /=
- [illegible] ரூ. 1000/=

இல.18A, யாழ். பஸ் நிலையம்,
(பஸ் நிலையத்தின் கிழக்குப் பக்கமாக உள்ள கடைகள் வரிசையில்)
யாழ்ப்பாணம்.
T.P. 071-338088.

உரிமையாளர்:
சே.ஆனந்தராஜா

(20001) (26-14-17)

**எட்டாம் ஆண்டு நினைவலைகள்**



மலர்வு 04 - 12 - 1949

உதிர்வு 09 - 07 - 1995

திருமதி

**கணேசலிங்கம் கமலாதேவி**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு
இல்லத்தில் வழிகாட்டி நின்றவரே!
காலத்தால் நாமும்மைப் பிரிந்தாலும்
ஞாலத்தில் தொடரும் நின் நினைவலைகள்

நவாலி றோட், நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(14-17) - குடும்பத்தினர். (20020)

இன்று (09.07.2003) புதன்கிழமை
காரைநகர் சிவகாமி அம்பிகா சமேத
ஸ்ரீசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான

**மஹா கும்பாபிஷேக விழா**

**சிறப்புற வாழ்த்துகின்றோம்.**

மேலும் எமது நிலைய அன்புள்ளங்கொண்ட சகல வாடிக்கையாளர்களுக்கும் அருள் கிடைக்கப்பெற பிரார்த்திக்கின்றோம்.

**காரை - துரித காகிதாதிகள் சேவைகள்**

**KQDS**

ஆஸ்பத்திரி வீதி, காரைநகர்.

எமது நிலையத்தில் படங்கள் மற்றும் ஆவணங்கள் கவரிட்டு வழங்கப்படும். பிறந்த நட்சத்திரத்திற்கான பலன்கள், பிறந்த திகதிக்குரிய பலன்கள், திருமணப் பொருத்தம் என்பன கணனிமூலம் குறைந்த கட்டணத்தில் பார்க்கப்படும். பிறந்த எண்களுக்கேற்ப பெயர் எண்கள் கணித்துக் கொடுக்கப்படும். நேரடியாகவும், தபால்மூலமும், தொலைபேசிமூலமும் தொடர்புகொள்ளலாம். தொலை பேசி இல.: 0777-738284.

(20012) (24-12-17)

சாவகச்சேரி செருக்கல்பதி
அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

**மஹாகும்பாபிஷேகப் பெருவிழா**

(10.07.2003 ஆனி மாதம் - வியாழன்
பகல் 9 மணிமுதல் 10.20 மணிவரை)

எண்ணெய்க்காப்பு:- 09.07.2003 புதன்
காலை 8 மணிமுதல் மாலை 5மணிவரை.
மஹா கும்பாபிஷேகம்:- 10.07.2003 வியாழன்
9 மணிமுதல் 10.20 மணிவரை (பழைய நேரம்).

பிரதிஷ்டா பிரதமகுரு:- "சித்தாந்த பண்டிதர்", "சித்தாந்த கலாநிதி"
**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்**
சாவகச்சேரி (நல்லை ஆதீன சிவாச்சாரியார்)
ஆலய குரு:- **பிரம்மஸ்ரீ இ.சுரேஸ்வரசர்மா**
ஸ்தானிககுரு, செருக்கல்பதி.
அனைவரும் வருக. அருள் பெறுக.

கும்பாபிஷேக உபயம்:-
திருமதி பஞ்சலிங்கம்
குடும்பத்தினர் – லண்டன்.

திரு. இராமநாதன் கருணாகரன்
தர்மகர்த்தா.

(20013)

விளம்பர அன்பளிப்பு: மங்களாஸ் - சாவகச்சேரி
N.S.A. எலக்ரோனிக்ஸ் - யாழ்ப்பாணம்.
(26-24-12-17)

**ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு**

திருமதி

**கிருஸ்ணசாமி செல்லம்மா**

கடந்த (09-06-2003) திங்கட்கிழமை கொழும்பில் இறையடி எய்திய எங்கள் இதயத்தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலம் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், ஏனைய உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றிகள்.


அன்னாரின் ஆன்ம ஈடேற்றக் கிரியைகள் இன்று (09-07-2003) புதன்கிழமை எமது கொழும்பு இல்லத்தில் நடைபெறும். அவற்றில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்துத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: வீ. பேரின்பநாயகம் (மருமகன்)
குஜன்தாஸ் ரெக்ஸ்ரைல்,
72, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-110009 Jaffna
01-587719.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(2000) (26-14-17)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



தோற்றம் 05 - 07 - 1928

மறைவு 09 - 06 - 2003

அமரர்

**ஆழ்வாப்பிள்ளை தர்மலிங்கம்**

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (09.07.2003) புதன்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நவிண்டில்,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

(20015) (24-14-17)

மனைவி: த.சரஸ்வதி,
மகன்: த.சிவகுமாரன்
(ஆசிரியர், பூநகரி ம.வி.).

# அன்புடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவதர்ம வள்ளலும் சமூக சேவையாளரும், வேணி களஞ்சியம், வேணி ரான்ஸ் போட், கோகுல் ரான்ஸ் போட் உரிமையாளரும் எமது அன்பிற்கும், மதிப்பிற்கும் உரியவருமான

உயர் திரு.

**குமாரசாமி கங்கை வேணியன்** அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவா னாக பதவி யேற்றுள்ளமையயிட்டு அவருக்கு நல் வாழ்த்துக்களும் நல்லாசிகளும் கூறுகின் றோம்.

*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (C-28844) (30-13-18-32)

திரு.திருமதி.யுவராசாவும் பிள்ளைகளும்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சமூக சேவையாளரும் ஆலய பரிபாலன சபை முக்கிய உறுப்பினரும் ஏழைகளுக்கு உதவி செய்யும் நல்ல உள்ளம் கொண்டவருமான

உயர் திரு. **குமாரசாமி கங்கை வேணியன்** அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமை இவரின் சேவைக்கும் நேர்மைக்கும் கிடைத்த பரிசு. அவர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(20035) (30-13-1832)

*தீவக லயன்ஸ் கழகத் தலைவர்.* ப.தேவநாயகம்.


# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் சீவரத்தினம்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாக கொண்டவரும் கனடாவில் வசித்தவருமான சதாசிவம் சீவரத்தினம் நேற்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் புஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் திருமதி அன்னம் செலலத்தம்பி, செல்வரத்தினம் அமுதமணி, கனகரத்தினம், திருமதி மகிழ் தெய்வேந்திரம், விஜயரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரரும் யசோகரன், திருமதி தேவநேசமலர் விஜயரத்தினம், திருமதி தேவஜோதி உதயகுமார், சதாகரன், வசீகரன் ஆகியோரின் அன்பு தந்தையும் விஜயரத்தினம், திருமதி விஜயகுமாரி யசோகரன், உதயகுமார், திருமதி ஜெயந்தி சதாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகன்யா, சுயன், ஆரணி, ஆர்த்தி, ஆருரன், நிகிந்தா, நிவேதா, திவியன், தினேஸ், சேந்தன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2003) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கீரிமலை வீதி,*
*பண்டத்தரிப்பு.* (20026) (30-13-18-32)

தகவல்:
பிள்ளைகள்.

## கைலாசபிள்ளை கெங்காதேவி (இந்திரா)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை கெங்காதேவி (இந்திரா) அவர்கள் நேற்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கைலாசபிள்ளையின் அன்பு மனைவியும் அனுசுயாதேவி (விமலா), ஜெயமதி, காலஞ்சென்ற கயாலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகரன், காலஞ்சென்ற மோகன் ஆகியோரின் மாமியாரும் துவாரகன், மயூரி, கேதாரணி, கஜரூபன் ஆகியோரின் பேர்த்தியும் நாகேஸ்வரி, தனலட்சுமி, பரமேஸ்வரி, ஈஸ்வரி, விக்னேஸ்வரன், மகேஸ்வரன், ஜெகநாதன், உதயகுமார் ஆகியோரின் சகோதரியும் பரமேஸ்வரி, பாக்கியலட்சுமி, அன்னரணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2003) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூநாரி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (20036) (30-13-18)

தகவல்:
வே.மனோகரன்
*(மருமகன்)*

## முத்தன் சரவணன்

இலந்தைக்காடு, வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தன் சரவணன் நேற்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் செல்லம்மாவின் அன்புக்கணவரும் இராசேந்திரம், குணரட்ணம், பாஸ்கரன், சிவமணி, இந்திராணி ஆகியோரின் தந்தையும் சிவயோகம், சின்னத்துரை, வினோதினி, கனகாம்பிகை ஆகியோரின் மாமனாரும் நவநீதராஜா, மோகனராஜா, துஸ்யந்தன், சாந்தினி, நந்தினி, சுபர்ணா, துஸ்யந்தி, யசோதினி, விதுர்சா, விநுசன் ஆகியோரின் பேரனும் ரவிச்சந்திரனின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2003) புதன்கிழமை 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலந்தைக்காடு,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (20031) (30-13-18-29)

தகவல்:
சி.துஸ்யந்தன்
(பேரன்)

## திருமதி கந்தையா பூரணம்

கேணியடி கிழக்கு, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பூரணம் அவர்கள் (07.07.2003) திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை கந்தையா (தில்லையர்) அவர்களின் அன்பு மனைவி ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*133/15 கேணியடி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (20037) (32)

தகவல்:
திருமதி உமாதேவி
திருச்செல்வம்
(மகள்)

## விளையாட்டு நிகழ்வுகள்

ஊர்காவற்றுறை,ஜூலை,9

ஊர்காவற்றுறை பிரதேசசபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச முன்பள்ளிகளிடையே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாலர் விளையாட்டுப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறை பொது நூலகத்துக்கு முனபாகவுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி க.இரத்தினசிங்கம் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார். (ம-16-76)

★ ★ ★

வடக்கு-கிழக்கு மாகாணப்பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட சதுரங்கச் சுற்று போட்டி இன்று புதன்கிழமை காலை 8மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதென வடக்கு-கிழக்கு மாகாண உடற்கல்விப் பணிப்பாளர் ரி.அருணகிரிராஜா தெரிவித்துள்ளார். (ஏ-5)

## அடுத்தவர் லொறியை கழற்றி விற்ற நபர்

வேறொருவருக்கு சொந்தமான 15 ஆயிரம் ரூபா பெறுமதியான லொறி உதிரிப்பாகங்களை பழைய இரும்புக் கொளவனவு செய்வோருக்கு விற்பனை செய்தார் எனக்கூறப்படும் நபரை சாவகச்சேரி பொலீஸார் தேடி வருகின்றனர்.

சரசாலைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. விற்பனை செய்யப்பட்ட உதிரிப்பாகங்களை லாண்ட் மாஸ்டர் ஒன்றில் ஏற்றிச் சென்றவர்கள் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

15 ஆயிரம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்களை இரத்தினம் என்ற நபர் 400 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார் என்று கூறப்பட்டது. (ஐ-10-11)

## கருத்தரங்கு

உடுவில் மற்றும் தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலைகளின் விஞ்ஞானபாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஏ-10-ரி)


**விக்னா கல்வி நிறுவனம்**

**A/L DAY CLASS**

ECO. - திரு.விக்கி - 7-8
TAM. - திரு.குழந்தை - 8-9
H/C. - திரு.பத்மராஜா - 7-8
GEO. - திரு.பாபு - 9-10
HIST. - திரு.சுதன் - 10-11
P/SCI. - திரு.ஸ்ரீரங்கநாத் - 11-12
CHRI. - திரு.வசந்தன் - 7-8
DRAMA - திரு.மதி - 12-1

LOG. திரு.சயந்தன்
சனி.ஞாயிறு. 8 மணி

ஆரம்பம்:09.07.2003
7 மணி. (28821)



**லக்ஷ்மி சினிமா**
இனுவில்

சரத்குமார், தேவயானி
ஆனந்தராஜ், மணிவண்ணன்
நடித்த (ரீல்ஸ்)
**சூரியவம்சம்**
(C/28863) (31-12-18)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)



**ராஜா** யாழ்ப்பாணம்

12ஆம் திகதி வரை.
விக்ரம், ஜோதிகா, விவேக்
**தூள்**
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30




**நிறஞ்சனா**

அர்ஜுன், மீனா, ஜோதிகா
நடித்த
**ரிதம்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.45, 6.00 (பு.நே.)
THE LORD OF THE RINGS
தினசரி இரவு 8.45 இற்கு



**லிபேட்டி** அச்சுவேலி

புதிய வெளியீடு



மாதவன், ஜோதிகா, தேவயானி, மணிவண்ணன் நடிப்பில்
**காதலுடன்** (ரீல்ஸ்)
தினசரி காட்சி நேரம்
7.30, 7.00 (பு.நே.)
THE LOST WORLD
JURASSIC PARK (ரீல்ஸ்)
தினசரி காலை 11.00 மணிக்கு



# 'நவாலி படுகொலை-1995'



09.07.1995 இல்
நவாலி தேவாலயத் தாக்குதலில் பலியான
**செல்வி ஹேமலதா செல்வராஜா**
(G.S-J/134) அவர்களின்
8 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு.* (C-28842) (30-18-13-32)

திருமதி செ.செல்வராணி
-HSCMF-


# மரண அறிவித்தல்கள்

## நாகரத்தினம் செல்வதி

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் செல்வதி நேற்று (8.7.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் (ஒப்பந்தகாரர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இளையதம்பி - செல்லம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற ஈஸ்வர் மற்றும் குணேஸ்வரி, திருச்செல்வம் (ThiruConstructions), தவராசா (கொன்ராக்ரர்), ஜெயராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெய ரத்தினம், சண்முகநாதன் (D.O.A), சந்தானலட்சுமி, பவளமலர், ருக்மணி ஆகியோரின் அன்பு மாமியாரும் சின்னத்தம்பி, மார்க்கண்டு (கொன்ராக்ரர்), சரஸ்வதி, அமரர்களான வைத்திலிங்கம், இளையபிள்ளை, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் துரைராசா (கொன்ராக்ரர்), அன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் மோகனதாஸ் (லண்டன்), ஜெனிற்நிலானி (சுவிஸ்), ரமணதாஸ், பாலேந்திரதாஸ் (சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி), அகிலசொரூபி (படவரைஞர்), குமரசொரூபன் (வெங்களூர் பல்கலைக்கழகம்), பிரதீபா (திறந்த பல்கலைக்கழகம்), இளங்கீதன் (பரியோவான் கல்லூரி), கமீலா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெருஷா, சுமங்கலா (உடுவில் மகளிர் கல்லூரி), துசேந், துசீலன், துசீந்திரன், ஈனோக், அன்ரன்ராயூ (சுவிஸ்), சுஜீந்திரன் (உபதபால் அதிபர்), செலின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2003) புதன்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். (20033) (30-18-13-32-29)

*நாகம்மாள் கோயில் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
நா.திருச்செல்வம்
நா.தவராசா *(கட்டட ஒப்பந்தகாரர்கள்)*

## திருமதி விக்கினேஸ்வரமூர்த்தி இந்திராணி

பாண்டியன் தாழ்வைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்கினேஸ்வரமூர்த்தி இந்திராணி நேற்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா விக்கினேஸ்வரமூர்த்தியின் மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை இராசமணியின் அன்பு மகளும் தாழையடி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த கந்தையா (ஓய்வு பெற்ற அதிபர்) இராசம்மாவின் அன்பு மருமகளும் சண்முகநாதன் (ஜேர்மனி), லலிதாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் கலாவதி, கலைவாணி, அம்பிகா, தயாளன், ஞானேஸ்வரன் ஆகியோரின் அண்ணியும் நடராஜாவின் (ஜேர்மனி) மைத்துனியும் சசிகரனின் (நோர்வே) சித்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.07.2003) புதன்கிழமை மாலை 2.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23, சந்தானமாதா கோயில் ஒழுங்கை*
*பாண்டியன் தாழ்வு,*
*யாழ்ப்பாணம்.* (20022) (30-18-13-32-2932)

தகவல்:
க.விக்னேஸ்வரமூர்த்தி
(கணவன்)

## ஆரோன் அபிஷேக்

ஆரோன் அபிஷேக் நேற்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

இவர் டாக்டர் த.வீரசுதன் (யாழ்.போதனா வைத்தியசாலை), தனுஜா (ஆசிரியர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான தங்கராஜா பரமேஸ்வரி தம்பதிகள், காலஞ்சென்ற ஜூட் அமிர்தநாதன் மற்றும் செல்வவதி தம்பதிகள், காலஞ்சென்ற சின்னப்பு மற்றும் வள்ளியம்மை தம்பதிகள் ஆகியோரின் பேரனும் த.சிவசுதன் (கனடா), நிஜித்தா (ஆசிரியர்,யாழ்ப்பாணக்கல்லூரி), சிந்துஜா (முகாமைத்துவம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பெறா மகனும் திருமதி சுப்பிரமணியம் (வட்டுக்கோட்டை), அகஸ்ரின் அமிர்தநாதன் (கொழும்பு) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாருக்கான இறை வேண்டுதல் ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (09.07.2003) புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*14/5, சீனியர் ஒழுங்கை,*
*(குட்டாதெரு சந்தி அருகில்),*
*யாழ்ப்பாணம்.* (20038) (30-18-13-32-2932)

தகவல்:
Dr.த.வீரசுதன்
(தகப்பன்)

## விசுவாசம் பிலேந்திரன் (மேசன் துரை)

யாழ்ப்பாணம், நாவாந்துறை, கெனடி வீதியைச் சேர்ந்த விசுவாசம் பிலேந்திரன் அவர்கள் நேற்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அந்தோனி ஞானப்பூவின் அன்புக் கணவரும் சிங்கராசா, யோன்வலன்ரைன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காங்கேசன் துறையைச் சேர்ந்த பரமேஸ்வரி, மாரியெல் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிகேதாரணி, துஷிபதாரணி, கோபிராஜ் (மாவீரர்), லெஸ்டினா (கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் நாவாந்துறை, கெனடி வீதியைச் சேர்ந்த அந்தோனி ஞானந்துரையின் அன்பு மைத்துனரும் ஞாயூலியற்றின் உடன் பிறவா சகோதரனும் லெனின் மொறாயஸ், றொபின்சன் மொறாயஸ், மேரியார்ஜ், தமிழ்ச்செல்வி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.07.2003) புதன்கிழமை பி.ப. 4 மணியளவில் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12/6, கெனடி வீதி,*
*நாவாந்துறை.* (20032) (30-13-18-32)

தகவல்:
சிங்கராசா(மகன்).

# அடுத்தகட்ட நடவடிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாமதம் காரணமாக அரசுத் தரப்பு அந்த வரைபைத் தம்மிடம் தரவில்லை என்று வெஸ்பேர்க் தமிழ்ச்செல்வனி டம் தெரிவித்தார்.

பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் உள்ள முட்டுக்கட்டைகள் தொடர்பாகவும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழி முறைகள் குறித்தும் விடுதலைப் புலி களின் நிலைப்பாட்டை அறிவதற்கே இந்த விஜயத்தைத் தாம் மேற்கொண்டதாகவும் வெஸ்பேர்க் அப்போது தெரிவித்தார்.

இடைநிறுத்தப்பட்ட பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் தமது தரப்புக்குத் தரும் அழுத்தங்கள் குறித்தும் வெஸபேர்க் புலிகள் தரப்பிடம் விளக்கிய தாக அறியவந்தது.

கடந்த 6 சுற்றுப் பேச்சுக்களில் கண்ட இணக்கப்பாடுகளை அரசு இது வரை நடைமுறைப்படுத்தாததால் மக்கள் மத்தியில் உருவாகியுள்ள நம்பிக் கையீனங்கள் குறித்து தமிழ்ச்செல் வன் அப்போது விளக்கிக் கூறினார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி - மக்களின் அன்றாடப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணக் கூடிய சூழ்நிலை ஏற்படும் போது விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் மீளபங்குபற்றக்கூடிய நிலை ஏற்படும் என்று தமிழ்ச்செல்வன் தமது தரப்பு நிலைப்பாட்டை விளக்கிக் கூறினார்.

சந்திப்புக் குறித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த தமிழ்ச்செல்வன், 'எமது தரப்பு நிலைப்பாடு தொடர்பாக உருவாகியுள்ள தவறான கருத்துக் களுக்கு பதிலளிக்கக்கூடிய சந்தர்ப்பம் இந்தச்சந்திப்பில் கிட்டியது. மீளப் பேச்சை ஆரம்பிக்க என்ன செய்யவேண்டும் என்ற எமது தரப்பு நியாயத்தை விளக்கி கூறினோம்' - என்று கூறினார்.

இச்சந்திப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட வெஸ்பேக் 'விரிவான விவாதமாக அமைந்தது' என்றார்.

"பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் உள்ள தடைகளை எப்படி நீக்குவது என்பது தொடர்பாக விவாதங்களும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. அவை பயன் உள்ளவையாக அமைந்தன. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை நேரில் அறியக்கூடிய வாய்ப்பு இந்த விஜயத்தின் மூலம் கிடைத்தது" என்று வெஸ்பேர்க் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்தார். (ஒ-3-5)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியாவில் யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாக சமூகத்தினரும் மன்னாரில் பொது அமைப்புக் களும் 'பொங்குதமிழ்' நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளதாக கூறப்பட்டது.

ஒன்றுபட்ட தமிழ் மக்களின் அபிலாசைகளை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவதே இந்த நிகழ்வு களின் நோக்கமென பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகளின் ஏற்பாட்டாளர் கள் தெரிவித்தனர். (ஒ-9-5)


LOGIC
A/L 2004 Paper Class
சனி,ஞாயிறு - 4 p.m.
A/L 2005 அனுமானம்
சனி,ஞாயிறு - 12 p.m.
BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்.
A/L 2005 - அனுமானம்
வியாழன் - 4 p.m.
மணி கல்வி நிறுவனம்
வேலணை
A/L 2004 -பகுதி II
சனி,ஞாயிறு - 7 p.m.
மதுபாரத் - திருமகளின் ஒழுங்கை
A/L 2005 பகுதி I
வகுப்பு அளவையியல்
திகழ் கல்வி நிறுவனம்
இணுவில்
★ BY:P.கமல் (19983)

BRIGHTMAN
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர்
A/L 2004
பௌதிகம
மின்புலம்
BY:ஜெயசீலன்
இன்று ஆரம்பம்:
09-07-2003 WED.3.00p.m.
(20019)


## உயர்பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவிட்டபுரம் கந்த சுவாமிகோயில் உற்சவத்தில் பங்கு பற்ற கடந்த 6 ஆம் திகதி அங்கு சென்றிருந்தார். அங்கு பொதுமக்கள் பிரவேசிக்கத் தடைசெய்யப்பட்ட பிரதேசத்துக்குள் இந்த மாணவர் சென்று விட்டார். இதனையடுத்து அவரை படையினர் கைது செய்தனர்.

பின்னர் இந்த மாணவன் மேலதிக விசாரணைக்காக காங்கேசன்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவர் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவரா என்பது குறித் துப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் அவரை மல்லாகம் நீதிவான் முன் பொலீஸார் ஆஜர் செய்தனர். இவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.(ஒ-3)

## சிரானின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி, திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, உதவி நிறைவேற்றுப்பணிப்பாளர் இனியவன் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

யுனிசெவ் உதவியுடன் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக மேற்கொள் ளப்படும் திட்டங்கள் குறித்தும் - கண்ணி அகற்றும் பணிகள் குறித் தும் - வெஸ்பேர்க் கேட்டறிந்தார்.

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கும் சென்ற வெஸ்பேர்க் இன்று காலை முல்லைத்தீவுக்கும் மாங்குளத்துக்கும் சென்று விட்டு பின்னர் கொழும்பு திரும்புவார்.


உயர் கல்வி மாணவர்களே!
உங்கள் ,ஆய்வுக்கட்டுரைகள் ஒரே நாளில் உங்களால் எழுதப் பட்டவையா? அப்படியாயின் சிறந்த முறையில் கணனிமூலம் பதித்து பைண்டிங் செய்து குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள நாடுங்கள். (19941)
ராம் பிறின்ரேஸ் பப்ளிக்கேசன்ஸ்
51, இலுப்பையடிச் சந்தி.
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.


## இரகசியப்பொலீஸ் விசாரணை தொடர்கிறது!

யாழ்ப்பாணம்,ஜூலை9
குடாநாட்டில் 2000ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட 14 கட்டட கட்டுமானப் பணிகளில் இடம் பெற்ற மோசடி தொடர்பாக குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கட்டுமானப் பணிகளின் ஒப்பந்தக்காரர்களான கூட்டுறவு அமைப்புக்களின் அதிகாரிகளிடம் இரகசியப் பொலீஸார் நேற்று இது தொடர்பாக வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர். (ஒ-3)

## குரங்குபாஞ்சான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படை அதிகாரிகளுடனும், விடுதலைப் புலிகளுடனும் தனித்தனியே ரெலிவிசன் நடத்திய பேச்சுக்களின் பயனாக இன்றைய சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது.

இருதரப்புக்குமிடையில் நிலவும் பலதரப்பட்ட விடயங்கள் குறித்தும் இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ-3-5)

## புலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனர்.

இவர்களை விசாரணை செய்த பொலீஸார் அவர்களை மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி அப்துல் கபூர் முன் நேற்றுக்காலை ஆஜர் செய்தனர். இருவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் கும்படி நீதிபதி உத்தரவிட்டார். (ஒ-3-5)

## படைமுகாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னம் அருகே - துறையூர் பாலத்துக்கு சமீபமாக - கடற்படைமுகாம் அமைந் துள்ளதாகவும் -

விளையாடிக்கொண்டிருந்த இந் தச் சிறுவன், முகாமின் பாதுகாப்பு வேலியை நெருங்கிய போது மின்சா ரத் தாக்குதலுக்கு உள்ளானதாக வும் - தெரிவிக்கப்பட்டது.

தெய்வாதீனமாக அச்சிறுவன் பாரதூரமான காயங்கள் ஏதுமின்றித் தப் பித்துவிட்டதாகவும் கூறப்பட்டது. இச் சம்பவம் குறித்து யுத்தநிறுத்தக் கண காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத் தில் முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் 1999ஆம் ஆண்டு ஜூலை மாதம், அம்பிகை நகர் கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவ ரான கே.சிவயோகலிங்கம் என்பவர் மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி உயி ரிழந்தமை குறிப்பிடத்தக்கது.(ஒ-9)


உ
சிவமயம்
புதுக்கடை திறப்புவிழா அழைப்பு
அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆனி மாதம் 24ஆம் நாள் (09.07.2003) புதன்கிழமை காலை 10.28 மணி தொடக்கம் 11.58 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற
ஹரீஸ் படமாடம்
என்னும் ஸ்தாபனம் ஆரம்பித்து வைக்க திருவருள் கூடியுள்ளது. அஞ்ஞான்றில் நடைபெறும் மங்கள நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.
(C28841) (32)
உரிமையாளர்.
சி.சிவயோகநாதன்
(ஹரீஸ் படமாடம்)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
மின்னியல்
By.M.கருணாநிதி B.Sc.(Spl)
SAT. SUN - 7.00 - 8.00
ஆரம்பம் 12-07-2003
(19992) (32)

தென்னிந்தியாவில் இருந்து
யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்





ராஜகுருசாமி
அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
காலை 9.00மணி முதல் மாலை 6.00மணி வரை
(30-28-12-18) ராஜகுருசாமி T.P. 5867
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.
(19953)

தேவை
கம்பியூட்டர் ரைப் செற்றிங்
(கணனியில் COREL DRAW, PAGE MAKER இல் அனுபவம் உள்ளவர்கள்)
ஓவ்(f) செற் இயக்குநர்
முன் அனுபவமுள்ளவர் (டேவிசன்)
தயா அச்சகம்
138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(C28809) (32)


## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி கந்தசாமி

நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கந்தசாமி கடந்த 07.07.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் அன்னம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-இளையபிள்ளை தம்பதிகளின் மருமகனும், சிவஞானத்தின் அன்புக் கணவரும் துஷியந்தி, யசோதா, ராதிகா, நிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவராசா, விக்கினராசா ஆகியோரின் மாமனாரும் சந்தனா, அபிராமி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.072003) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறிவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (20027) (29)
தகவல்:
கு.கனகலிங்கம் (சகோதரன்)

### திருமதி குணமணி கந்தப்பு

**(இளைப்பாறிய ஆசிரியை - யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்)**

திருமதி குணமணி கந்தப்பு அவர்கள் 04.07.2003 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மா.கந்தப்புவின் (இளைப்பாறிய ஆசிரியர், நல்லூர் வட்டார கல்வி அதிகாரி உதவியாளர் / வட இலங்கை சங்கீத சபை நிர்வாக செயலாளர்) அருமை மனைவியும் Dr.குணரஞ்சினி (Dental Institute - Colombo), காலஞ்சென்ற குணவதி, ஸ்ரீகந்தகுமார் (துபாய்), ஸ்ரீகந்தபாலா, ஸ்ரீகந்தசீலன் (சார்ஷா) ஆகியோரின் அருமைத் தாயாரும் ஸ்ரீரஞ்சன் (கனடா), கலா, மாலினி, உமாதேவி ஆகியோரின் மாமியும் திவ்யா, வகஷணகீதன், சுஜீவன், டிலானி, கோகுல், பவன் ஆகியோரின் அருமைப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Barney Raymonds, பொரளை மலர்ச் சாலையில் நேற்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 3மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று (09.07.2003) புதன்கிழமை பி.ப.3மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று, 5மணிக்கு பொரளை பொது மயானத்தில் (கனத்தை) பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

**தகவல்:**
ஸ்ரீகந்தபாலா (மகன்)
**T.P: 361500**

(சி-28845) (32)






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.